Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 03

திங்கட்கிழமை
29 நவம்பர் 2021

கார்த்திகை 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

## கொரோனா சாவு 27 தொற்று 742

கொழும்பு, நவ.29
நாட்டில் நேற்றுமுன்தினம் 27 பேர் கொரோனாத் தொற்றால் உயிரி

15 ▶

## இளம் தாய் திடீரென உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.29
தலைச்சுற்று, வாந்தி காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் தாய் ஒருவர் சிகிச்சை பய

15 ▶

## நெடுந்தீவு கடற்கரையில் கரையொதுங்கிய சடலம்!

யாழ்ப்பாணம், நவ.29
நெடுந்தீவு கடற்கரையில் நேற்றுப் பிற்பகல் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது. சடலத்தை

15 ▶

## 12 வயதுச் சிறுவனை தாக்கி விரட்டிய தாய்

கொடிகாமம் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ.29
12 வயது மகனை வீட்டில் இருந்து அடித்து விரட்டிய குற்றச்சாட்டில் தாய் ஒரு

15 ▶



## சிற்றுண்டிகளின் விலைகள் ஏற்றம்

கொழும்பு நவ. 29
சிற்றுண்டிகளின் விலை 5 ரூபாவினாலும், கொத்து ரொட்டியின் விலை

15 ▶

# அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்

## வலியுறுத்துகின்றது ஐ.நா.

கொழும்பு, நவம்பர் 29

நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய ஆட்சி நிர்வாகம், சிறந்த குடியுரிமைத் தொடர்பு மற்றும் அனைத்து இலங்கையர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று – இலங்கைக்குப் பயணம் செய்திருந்த மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் காலி கியாரி வலியுறுத்தியுள்ளார்.

15 ▶

## கிண்ணியா படகு விபத்து மற்றொரு சிறுமி மரணம்



திருமலை, நவ.29
கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது. படகு விபத்தில் பாதிக்கப்பட்டு திருகோணமலை பொது

15 ▶

## காணி சுவீகரிப்புக்கு எதிராக இன்று மாதகலில் போராட்டம்!

அனைவருக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.29
மாதகல் பிரதேசத்தில் ஜே /150 கிராம அலுவலர் பிரிவில் பொதுமக்களின் காணிகள் இராணுவத்தின் தேவைக்காக சுவீகரிப்புச் செய்யப்படவுள்ளன என்று அறிவிக்

15 ▶

### முச்சந்தி முரளி




## கந்தரோடை, கேகாலையில் வெடித்தன எரிவாயு அடுப்புகள்; மக்கள் பெரும் குழப்பம்

யாழ்ப்பாணம், நவ.29
சுன்னாகம், கந்தரோடை மற்றும் கேகாலை, கஹட்டபிட்டிய ஆகிய இடங்களில் நேற்று எரிவாயு அடுப்புக்கள் திடீ

15 ▶



## ஊடகவியலாளர் தாக்கப்பட்டதை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, நவ.29
முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் ஊடகவியலாளர் ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முல்லைத்

15 ▶

## ஊடகவியலாளர் மீது தாக்குதல் மூன்று இராணுவத்தினர் கைது

முல்லைத்தீவு, நவ.29
ஊடகவியலாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 3 இராணுவத்தினர் முல்லைத்தீவுப் பொலிஸாரால் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் செய்தி சேகரிப்புக்காகச் சென்ற ஊடகவிய

14 ▶

## யாழிலும் பாண் விலை 10 ரூபாவால் அதிகரிப்பு

**பணிஸின் விலையும் 5 ரூபாவால் உயர்வு**



யாழ்ப்பாணம், நவ. 29
கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாணின் விலையை 10 ரூபாவாலும், பணிஸ்

15 ▶

## சித்தார்த்தன் தலைமையில் ஒற்றுமைக்கான முயற்சிகள்

**வேண்டுகோள் விடுத்தார் மாவை**

யாழ்ப்பாணம், நவ.29
தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதி


15 ▶

### கொரோனாவின் புதிய திரிபான

# ஒமிக்ரோன் வைரஸ் 113 பேருக்குத் தொற்று

கொழும்பு, நவ. 29

**வேகமாகப் பரவிவரும் ஒமிக்ரோன் வைரஸ் தொற்று உலக நாடுகளில் இதுவரை 113 பேரிடம் உறுதி செய்யப்பட்டுள்ளது. டெல்டா திரிபை விடவும் வீரியமிக்கது என அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஒமிக்ரோன், தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள நிலையில், தற்போது ஐரோப்பிய நாடுகளையும் அச்சுறுத்திவருகிறது.**



இதுவரை ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் தென்னாபிரிக்காவில் 99 பேரும், போட்ஸ்வானாவில் 6 பேரும், .ஹொங்கொங்கில் 2 பேரும், பிரிட்டனில் 2 பேரும், செக் குடியரசில் ஒருவரும் , பெல்ஜியத்தில் ஒருவரும், இஸ்ரேலில் ஒருவரும், இத்தாலியில் ஒருவருமாக இதுவரை 113 பேருக்கு ஒமிக் ரோன் தொற்று உறுதிசெய்யப்பட் டுள்ளது.

மேலும் தென்னாபிரிக்காவில் 990 பேருக்கும், போட்ஸ்வானாவில் 9 பேரும், இஸ்ரேலில் 7 பேரும், நெதர்லாந்தில் 61 பேரும், ஜேர்மனியில் 3 பேரும், டென்மார்க்கில் 2 பேரும், ஒஸ்திரியாவில் ஒருவரும் என மொத்தமாக ஆயிரத்து 73 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று இருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் ஆங்கில இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது.

புதிய ஒமிக்ரோன் மாறுபாடு தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள உலக சுகாதார நிறுவனத்துக்கு கடந்த புதன்கிழமை அறிவிக்கப்பட்டது. புதிய மாறுபாடு வேகமாகப் பரவக்கூடும் அபாயத்தைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

உலகநாடுகள் தற்போது தென்னாப்பிரிக்க நாடுகளுக்கான பயணத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தி, மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## ஆபிரிக்கா மீதான தடைக்கு வரவேற்பு

கொழும்பு, நவ. 29

ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் பிறழ்வு அடையாளம் காணப்பட்டதையடுத்து, ஆபிரிக்க நாடுகளிலிருந்து வருபவர்களைத் தடைசெய்ய அரசு மற்றும் சுகாதார அமைச்சகம் எடுத்த முடிவை சுகாதார வல்லுநர்களின் தொழிற்சங்கங்கம் பாராட்டியுள்ளது.

எனினும், எழுமாற்றான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாதநிலையில், இந்த பிறழ்வு நாட்டுக்குள் நுழைந்ததா? இல்எலையா என்பதை இலங்கை எவ்வாறு தீர்மானிப்பது என்றும் சங்கம் கோள்வி எழுப்பியுள்ளது . (த-இ)

## ஒமிக்ரோன் வைரஸ் ஆய்வுக்குத் தயார்

### மூலக்கூறு மருத்துவத்துறை பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

கொரோனாத் தொற்றின் புதிய திரிபான ஒமிக்ரோன் வைரஸுக்கு இலங்கை நன்கு தயாராக இருப்பதாக ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறை பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

எந்தவொரு வைரஸ் விகாரத்தின் வருகையையும் ஒருபோதும் நிறுத்தமுடியாது. இந்த வைரஸைக் கண்டறிய இலங்கையில் ஆய்வக வசதிகள் உள்ளன. இது குறித்து தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தத் தேவையில்லை.

கொரோனாவுக்கு எதிரான அரசின் தொடர்ச்சியான கட்டுப்பாடு வெற்றிகரமாக இருப்பதாகவும், வெளிநாட்டவர்கள் நாட்டுக்குள் நுழைவதற்கு தற்போதுள்ள விதிகள் போதுமானவை என்றும் அவர் கூறினார். (த-இ)



## இரணைமடுக்குளத்தின் 4 வான் கதவுகள் திறப்பு


கிளிநொச்சி,நவ.29

கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தின் 4 வான் கதவுகள் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளன.

குளத்தின் நீர் மட்டம் 34 அடி 02 அங்குலமாக உயர்ந்த நிலையில், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரனால், நான்கு கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் த.இராஜகோபு, கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.செந்தில்குமரன், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

இரணைமடுக் குளத்தின் முழுமையான நீர் மட்டம் 36 அடி என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4-13)



## முழங்காவில் கிராம, சமுர்த்தி அலுவலகங்கள் உடைப்பு

கிளிநொச்சி, நவ. 29

முழங்காவில் கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அலுவலகம் என்பன இனந்தெரியாதோரால் நேற்று உடைக்கப்பட்டுள்ளன என்று முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்து நாள்களுக்குமுன்னர், முழங்காவில்-அன்புபுரம் முன்பள்ளி உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

முழங்காவில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-13)



முல்லைத்தீவு, கருவேலன்கண்டல் குளத்தின் வான் பகுதி கடந்த வெள்ளிக்கிழமை உடைப்பெடுத்ததையடுத்து, குளத்தில் இருந்து நீர் வெளியேறி வருகின்றது. அதனால் அந்தக் குளத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட விவசாய முயற்சிகள் பாதிப்படைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-113-13)

# கிண்ணியா பேரனர்த்தம் நானாட்டானில் ஏற்படலாம்

### அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

மன்னார், நவ.29

கிண்ணியா பேரனர்த்தம் மன்னார்-நானாட்டான் பிரதேச செயலர் பிரிவிலும் ஏற்படலாம் என்று மக்கள் எச்சரித்துள்ளனர். நானாட்டானில் இருந்து மடுக்கரை கிராமத்துக்குச் செல்வதற்காக அமைக்கப்பட்ட பாலம் தரமற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சில நாள்களுக்கு முன்னர் ஊடகங்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து, கொட்டும் மழையில் சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த பாலத்தின் வேலைத்திட்டங்கள் வடக்கு மாகாண நிதியில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் செய்யப்படுகின்றன என்று அறிய முடிகின்றது.

கடந்தவருடம் இதேபோன்ற மழை காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாலத்தின் கட்டுமானம், கடந்த ஒக்ரோபர் மாதத்தில் நிறைவுற்று பிரதேச செயலகத்துக்கு கையளிக்கப்பட முன்னர் ஓரிரு நாள்கள் மக்கள் பாவனைக்கு விடப்பட்டது.

பொதுமக்கள் பாவனையின்போது பாலத்தில் வெடிப்புக்கள் ஏற்பட்டு, பாலம் கீழே இறங்கி ஆபத்தான நிலையில் காணப்பட்டது.

ஊடகங்கள் வெளிப்படுத்தியதால் கொட்டும் மழையில் பாலத்தின் வெடிப்பு மற்றும் தாழிறங்கிய பகுதிகளைச் சீரமைப்பதாக பாசாங்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த மடுக்கரை பிரதான பாலத்தினூடாக மூன்று கிராம மக்கள் பயணம் செய்கின்றனர்.

மேலும் சிறு வியாபார வாகனங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உழவு இயந்திரங்களும் இரவு பகலாகச் சென்று வருவதுண்டு. இந்தப் பாலம் ஒரு கிராமப்புறத்தில் இருப்பதால் எவரும் கண்காணிக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில் மிகவும் தரமற்றமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. கடமைக்காக இந்தப் பாலம் புனரமைக்கப்படின், நிச்சயமாக என்றோ ஒருநாள் திருகோணமலை கிண்ணியாவில் நடைபெற்ற விபத்தைப்போலவே நடக்கும். எனவே வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அசமந்தப் போக்கால் மிகமிகத் தரமற்ற முறையில் அமைக்கப்பட்ட இந்தப் பாலத்தை வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு, தரமான, உறுதிமிக்க ஒரு பாலத்தை அமைப்பதற்கு உதவ வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-213)

# தொற்றுக்குள்ளானோருக்கும் புதிய கொரோனாத் தொற்று!

## மருத்துவர் யமுனாநந்தா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ. 29**

**கொரோனாப் பெருந்தொற்றின் 2 வருடங்கள் நிறைவில் புதிய விகாரமுற்ற ஓமிக்ரோன் திரிபு, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. எனவே கொரோனாத் தொற்றுத் தடுப்புக்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தல் அவசியம்.**

இவ்வாறு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர்களில் ஒருவரான மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

புதிய தோற்றம் மருத்துவ சமூகத்தை மீளவும் விழிப்படைய வைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் அவதானிக்கப்பட்ட இந்த விகாரமுற்ற நுண்மி உலகை மீளவும் முடக்க நிலைக்கு இட்டுச் செல்லலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. புதிய விகாரமுற்ற நுண்மியால் ஏற்கனவே முகக்கவசம் அணிதல், தனியாள் இடைவெளிபேணல், கைகளைச் சுத்தம் செய்தல் என்பன மிகவும் அத்தியாவசியமானவை. கொரோனாத் தடுப்பூசியை 20 வயதுக்கு மேல் அனைவரும் கட்டாயமாகப் பெற்றுக்கொள்ளல்வேண்டும். ஏனெனில், இளவயதினர்கொரோனாத் தடுப்பூசியைப் பெறுவதில் பின்னிற்பதால் இந்தத்தொற்று தென்னாபிரிக்காவில் இளவயதினரையே அதிகம் பாதித்துள்ளது. தடுப்பு மருந்து பெற்றுக்கொள்வது நோயின் தீவிரத் தன்மையைக் குறைக்கும்.

மேலும் கொரோனாத் தொற்றுக்கு எதிராக வருடாந்தம் பூஸ்டர் தடுப்பு மருந்து ஏற்றவேண்டிய அவசியத்தையும் புதிய திரிபடைந்த நுண்மி எமக்கு உறுதிப்படுத்தியுள்ளது. எனவே தொற்றுக்கு எதிராகத் தடுப்பு மருந்து ஏற்றத் தயங்கியவர்கள் தொற்றுக்கு எதிரான நீர்ப்பீடனத்தைப் பெறுவதற்குத் தற்போது அந்தத் தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ளல் அவசியம். மருத்துவசமூகமும் மாற்றமடையும் கொரோனாத் திரிபுக்கு ஏற்ப புதிய தடுப்பு மருந்துகளையும், நோய் நிவாரணி மருந்துகளையும் அவசர அவசரமாக உருவாக்க வேண்டிய நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்கள் தமது சமூகப் பொறுப்பை உணர்ந்து கொரோனாப் பரம்பலைக் கட்டுப்படுத்த தம்மால் இயன்ற காப்பு நடவடிக்கைகளைக் கைக்கொள்ளல் வேண்டும். தேவையற்ற சுற்றுலாப்பயணங்கள், ஒன்றுகூடல்களைத் தவிர்த்தல் நல்லது - என்று குறிப்பிட்டுள்ளார். (த)

# அதிக நிறையுடன் வெற்றுச் சிலிண்டர்

கொழும்பு,நவ.29

சாதாரண வெற்று எரிவாயுக் கொள்கலனின் நிறையை விடவும் 2.5 கிலோகிராம் அதிக நிறையுடைய கொள்கலன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பண்டாரவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த எரிவாயு விற்பனையாளர் அதனைப் பரிசோதனையிட்டுள்ளார்.

எரிவாயுக் கொள்கலன் 12.5 கிலோகிராம் எரிவாயுவுடன் காணப்படும். வெற்று எரிவாயு கொள்கலன் 12.2 கிலோக்கிராம் எடை கொண்டது.

எரிவாயு கொண்ட முழுமையான கொள்கலன் 24.7 கிலோகிராம் எடையுடையதாகக் காணப்படும்.

எனினும் இந்தக் கொள்கலனை அசைத்துப் பார்க்கும்போது, ஏதோ ஒரு பொருள் உள்ளே இருப்பது போன்று சத்தம் கேட்டுள்ளது. அதனை அழுத்திப் பார்க்கும் போது அதில் எரிவாயு இல்லை. எனினும் மேலதிக 2.5 கிலோகிராம் எடை காணப்பட்டது. அதனை மறுபக்கம் திருப்பி அழுத்தும்போது கறுப்பு நிறத்தில் திரவம் போன்று வெளியேறியது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தனது வீட்டு எரிவாயுக் கொள்கலனில் கசிவு உள்ளது என்று தல்பிட்டிய தழுவ நிர்மலபுர பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் எரிவாயுக் கொள்கலன்களை உடனடியாகப் பரிசோதிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ஒ-4)

# மன்னார் மாவட்டத்தில் புதிதாக 13 தொற்றாளர்கள்

மன்னார், நவ.29

மன்னார் மாவட்டத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளில் கடந்த சனிக்கிழமை 13 பேருக்குத் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ச-60)

# பீற்றர் இளஞ்செழியன் பிணையில் விடுவிப்பு!

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவு கடற்கரையில் சுடர் ஏற்றுவதற்காகச் சென்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும், வாலிபர் முன்னணி பொருளாளருமான பீற்றர் இளஞ்செழியன் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம)

# ஜனவரியில் தரம் 5 பரீட்சை பெப்ரவரியில் உ/த பரீட்சை

***மே மாதத்தில் சாதாரணதரப் பரீட்சை***

கொழும்பு, நவ. 29

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையையும், பெப்ரவரி முதலாம் வாரத்தில் க.பொ.த. உயர்தரப்பரீட்சையையும், மே மாதம் 23 ஆம் திகதி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை- 6ஆம் தரம் முதல் 9ஆம் தரம் வரை கட்டாயப் பாடமாக உள்ள குடியுரிமைக்கல்விப் பாடத்தை சட்டம் மற்றும் குடியுரிமைக் கல்வியாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)




**கெ**ட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான். அப்பிடியிருக்கேக்க கெட்டவேலையளின்ர ஆயுள் கனநாள் நிண்டுபிடிக்குமோ? இப்ப அப்பிடி கெட்டவேலையளும் கனநாள் நிக்காது எண்ட மாதிரித்தான் சம்பவங்கள் நடந்து கொண்டி ருக்கு. அண்டைக்கு கனவு பாழான குரூப்பின்ர 'அதிகாரியளை மாத்துற படலம்' பற்றிப் பாத்த னாங்கள் எல்லோ.

தங்கட ஆட்டத்துக்கு தடையாக இருக்கிற அதிகாரி யளை எல்லாம் வருடாந்த இடமாற்றம் எண்ட போர்வையில கூண்டோட வேற மாவட்டங்களுக்கும், மாகாணங்களுக்கும் தூக்கியடிச்சிருக்கினம். இந்த இடமாற்றத்தை அரசாங்கம் தான் செய்யு தெண்டாலும், அதுக்கான லிஸ்ட் இவை குடுத்ததுதான். சனத்துக்கு ஏதும் நல்லது செய் யுறதுக்கு ஒரு துண்டுக் காகிதம்கூட குடுக்காத இந்தக்குரூப், தங்களுக்கு எதிராய் நிக்கிறவையைப் பழிவாங்கிறதைமட்டும் வலுதிறமாகச் செய்து கொண்டிருக்கு. இந்த இடமாற்ற லிஸ்ட்டில தான் இப்ப ஒரு திருப்பம். இப்பிடி ஒரு திருப்பத்தை ஆருமே எதிர்பார்த்திருக்கமாட்டினம்.

விசயம் என்னெண்டால், எந்த கனவு குரூப் அதிகாரியளை இடம் மாத்துறத்துக்கு லிஸ்ட் குடுத்திச்சோ, அதே கனவு குரூப்தான் அந்த அதிகாரியளின்ர இடமாற்றத்தை நிப்பாட்டச் சொல்லி, அவையின்ர அப்பீல் கடிதத்தோட மேல்மட்டங்களின்ர கதவைத் தட்டிக் கொண்டிருக்காம். எப்பிடி இந்தத் திருப்பம் நடந்ததெண்டு உங்களுக்கு குழப்பமாக இருக்கும். அதைத் தீர்க்கிறதுதானே பட்சியின்ர வேலை.


கனவுபாழான குரூப்புக்குள்ள இப்ப கொஞ்சக் காலமாக கோஷ்டி மோதல் நடந்து கொண்டிருக்கு. அப்பா கோஷ்டி ஒரு பக்கம், சித்தப்பா கோஷ்டி மற்றப்பக்கம் எண்டு கனவு பாழானவரை சிப்பிலியாட்டுகினமாம். ஆர் பெரிசு எண்டு இவையள் காட்டுறதுக்காக மற்றவையின்ர வாழ்க்கையில இந்த இரண்டு கோஷ்டியும் விளையாடத் தொடங்கியிருக்கினம். அப்பிடி ஒரு விளையாட்டுத்தானாம் இந்த அதிகாரிகளைக் கூண்டோட இடம்மாத்துற வேலையும். இந்த வேலையைப் பார்த்தது சித் தப்பா கோஷ்டி. அப்பிடி இடம் மாற்றம் வந்திட்டால் சித்தப்பா கோஷ்டிக்குத்தான் பவர் இருக்கெண்டு உறுதியாகிடுமெல்லோ. அதால எப்பிடியாவது இந்த இடமாற்றத்தை நிப்பாட்டி, தங்கட பவரைக் காட்டுறதுக்காக அப்பா கோஷ்டி களத்தில இறங்கி இருக்கு. அதிகாரியளின்ர அப்பீல் கடிதங்களோட கொழும்புக்கு இந்த மழைக்குள்ளயும் ஓடிப்போன அப்பா கோஷ்டி அங்க உரிய ஆக்களைச் சந்திச்சு, இந்த இடமாற்றத்தை நிப்பாட்ட கடுமையா வேலை செய்யுது. அப்பிடி இடமாற்றத்தை நிப்பாட்டினா அப்பா கோஷ்டிக்கு இரண்டு இலாபம். ஒண்டு, கனவுபாழான குரூப்பில தாங்கள்தான் பெரிசு எண்டு மற்றக் கோஷ்டியை மட்டம் தட்டலாம். இரண்டாவது, தங்களுக்கு இடமாற்றம் கிடைச்சும் அதை நிப்பாட்டி நல்லது செய்த அப்பா கோஷ்டிக்கு அதிகாரியள் நன்றிக்கடனாக சிலவேலையள் செய்து குடுப்பினம். இப்பிடியெல்லாம் கூட்டிக் கழிச்சுக் கணக்குப் போட்டுத்தான் அப்பா கோஷ்டி ஓடித்திரியுது. பாப்பம் எந்தக் கோஷ்டி வெல்லுது எண்டு...!



- பட்சி

# கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் இலங்கை அரசு

## ஊடக அமையம் கண்டனம்



**முல்லைத்தீவு, நவ.29**

**கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் நடவடிக்கையை இலங்கை அரசு திட்டமிட்டுச் செய்து வருகின்றது என்று- முல்லைத்தீவு ஊடக அமையம் கண்டனம் தெரிவித்துள்ளது.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஷ்வச்சந்திரன் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;- முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் "முள்ளிவாய்க்கால்" எனும் அடையாளப் பெயர்ப் பலகையை ஒளிப்படம் எடுத்துக்கொண்டிருந்தவேளை, இராணுவத்தினர் குறித்த ஊடகவியலாளர் மீது முள்ளுக்கம்பியால் சுற்றப்பட்ட பனை மட்டையால் மிக மூர்க்கத்தனமாக தாக்குதல் மேற்கொண்டு சித்திரவதை புரிந்துள்ளனர்.

அத்துடன் ஊடகவியலாளரின் உடைமைகளான ஒளிப்படக்கருவி, கையடக்கத்தொலைபேசி என்பவை படையினரால் பறிக்கப்பட்டுள்ளன. உந்துருளியும் சேதமாக்கப்பட்டுள்ளது.

பல சவால்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் மிக துணிச்சலுடன் ஊடகப்பணியை ஆற்றிய வி.விஷ்வச்சந்திரன் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமையானது, மிக மோசமான மனித உரிமை மீறல் என்பதுடன், ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும்.

தொடர்ச்சியாக நாடெங்கும், குறிப்பாக வடக்கு- கிழக்குப் பகுதியில் பக்கச்சார்பற்ற வகையில் செய்திகளைச் சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரிக்கின்றன.

இது குறித்த முறைப்பாடுகள் பொலிஸ் மற்றும் ஜனாதிபதி வரையிலான உயர்மட்டத்துக்கு அளிக்கப்பட்டபோதும், இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

அரசின் இந்த நிலைப்பாடே, எந்தக் குற்றத்தையும் செய்துவிட்டு அதிலிருந்து தப்பிவிடலாம் என்கிற எண்ணப்போக்கை ஏற்படுத்தியுள்ளது. முறைப்பாடு அளிக்கப்படும்போது அது விசாரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் நடைபெற்றிருக்காது. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் ஊடகத்துறை மீது பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் சுயாதீனமானதும், வினைத்திறனானதுமான ஊடக செயற்பாட்டுக்கு அடிக்கப்பட்ட சாவு மணியாகும்.

கடந்த காலங்களில் 44 தமிழ் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் அதற்கான நீதிகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மீண்டும் தொடர்ச்சியாக தமிழ் இன அடையாளத்தைக் கொண்ட ஊடகவியலாளர்கள் என்ற காரணத்தால் அச்சுறுத்தல்களும், துன்புறுத்தல்களும், சித்திரவதைகளும் தமிழ் ஊடக பரப்பைச் சேர்ந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வருவது கவலைக்குரிய விடயமாகும்.

ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளில் அக்கறையுள்ள உரிய தரப்புக்களும், சர்வதேச அமைப்புக்களும், சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றுள்ளது. (ஒ-4-19)

## வடக்கின் ஊடக சிகரம்

தமிழ்பேசும் மக்களின் குரலாக இந்த 36 ஆண்டுகள் உதயன் பயணித்திருப்பது சாதனையும்-பெருமையுமாகும். உயிர், உடைமை, இழப்புக்களைக் கண்டு கலங்காது மிடுக்கோடு பயணிக்கும் உதயன் நாளிதழ் மக்களின் பாதுகாவலன் என்றால் மிகையாகாது. போர், கொரோனா மற்றும் இயற்கை பேரழிவு காலங்களில் மக்களை வழி நடத்தியவர்களில் தன்னம்பிக்கையூட்டியவர்களில் உதயன் முதன்மையானவன். மக்களின் மனதறிந்து அரசியல்வாதிகள், நிர்வாக அதிகாரிகளின் அலட்சிய பொறுப்பற்ற செயற்பாடுகளை வெளிப்படுத்தி, நாடும் மக்களும் நலன்பெற உதயன் மேன்மேலும் நெருப்பாய் கொதிப்பான் என்ற நம்பிக்கை எமக்குண்டு. உதயன் குடும்பத்தினர் யாவருக்கும் இறையருள் கிடைத்திட வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

அன்பு வாசகன்
நா.துஷாந்

## ஊடக வரலாறு விடைபெற்றது

ஊடகவியலாளர் கவிதரன் அனுபவப் பகிர்வு

உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு எவர் தன்னைக் காணவந்தாலும் அவரை சந்திக்காமல் திருப்பி அனுப்பிய பழக்கம் எமது வாழ்நாள் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனுக்கு இருந்ததில்லை. அவ்வளவு நேர்த்தியாகத் தன் நேர அட்டவணையைப் பின்பற்றியவர் அவர். பிரதமஆசிரியர் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டுவிட்ட இந்தத் தருணத்தில் அவருடனான அலுவலக அனுபவத்தை மீட்டிப்பார்த்தலென்பது கடினமானது. உதயனின் ஆணிவேர் எங்கள் ஆசிரியர். ஊடகத்தை உயிர் மூச்சாக சுவாசித்தவர். தமிழீழ நிழல் அரசு மௌனிக்கப்படாமல் இருந்திருந்தால் "மாமனிதர்"என்ற உயர் அங்கீகாரம் இவருக்கு தமிழீழத் தேசியத் தலைவரால் வழங்கப்பட்டிருக்கும். அந்தளவுக்கு தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும், தமிழ்த் தேசியத்துக்காகவும் ஆசிரியர் தன்னை அர்ப்பணித்திருந்தார். அதனால்தான் அவருக்கு அத்தனையத்தனை உயிரச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இன்றைக்கு வடக்கிலிருக்கும் பெரும்பாலான எழுத்தாளர்களுக்குப் பிள்ளையார்சுழி போட்டவர் பிரதம ஆசிரியர் என்றால் அதை மறுத்துரைப்பதற்கில்லை. அந்தளவிற்கு எல்லோரையும் தட்டிக்கொடுக்கின்ற உயர்ந்த உள்ளம் கொண்டவர் ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன். அவரின் ஆத்மா இறைவன் அடியில் இளைப்பாறட்டும்.

## ஊடகத்தின் சுயாதீனத்தன்மை கோத்தா அரசில் கேள்விக்குறி

### கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் கடும் கண்டனம்

முல்லைத்தீவு பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஷ்வச்சந்திரன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இலங்கையில் ஜனநாயகத்தின் மூலமாகிய ஊடக சுதந்திரத்தின் இருப்பை, அதன் சுயாதீன தன்மையைப் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன். அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: முல்லைத்தீவில் ஊடகவியலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இராணுவ சர்வாதிகார இலக்கை நோக்கி இந்த அரசு பயணிப்பதையே காட்டுகிறது. இந்தத் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தாக்குதலுக்கு எதிராக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் -என்றார். (ம-19)

## பேனா முடங்கின் நாடு கெட்டுவிடும்

### முகுந்தகஜன் கண்டனம்

முள்ளிவாய்க்கால் பகுதியில் முல்லைத்தீவு பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஷ்வச்சந்திரன் தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன். பேனா முனையை முடக்கினால் நாடு கெட்டுவிடும். இவ்வாறு தெரிவித்துள்ளார் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் முகுந்தகஜன்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- முள்ளிவாய்க்கால் பகுதியில் முல்லைத்தீவு பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் தாக்கப்பட்டடையைக் கண்டிப்பதுடன் கடந்த காலங்களிலும் பல சந்தர்ப்பங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது புதுக்குடியிருப்புப் பிரதேச சபையில் பல தடவைகள் கண்டனப் பிரேரணைகள் நிறைவேற்றியுள்ளேன்.

தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் மீதும் ஊடக சுதந்திரத்தின் மீதும் இடம்பெறுகின்ற வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும். ஜனநாயக நாட்டில் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

தாக்குதல் நடத்தியவர்கள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு நாட்டில் ஏர்முனை மடங்கிலும், பேனா முனை முடங்கினாலும் நாடு கெட்டுவிடும் என்பார்கள் -என்றுள்ளது. (ம-19)

## ஊடகத்துறையின் விடிவெள்ளி மறைந்தது

ஊடகத்துறைக்கு ஒரு விடிவெள்ளியாகத் திகழ்ந்த உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனின் இழப்பு, ஈடு செய்ய முடியாத பேரிழப்பே.

பொறியியலாளராகும் கனவுடன் கல்வி கற்றுவந்தவேளை யாழில் வெளிவந்த ஈழநாடு பத்திரிகையில் 1962ஆம் ஆண்டு முதல் உதவி ஆசிரியராகச் சேர்ந்து, தன் கனவைத் துறந்து முழு நேர ஊடகவியலாளராக உருவானார். 1965ஆம் ஆண்டில் கொழும்பு சென்று தினபதி, சிந்தாமணிப் பத்திரிகைகளில் பணியாற்றி, 1983 ஆண்டுக் கலவரத்தின்பின், கப்பலில் யாழ். திரும்பி தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க தன்னாலான முழு முயற்சிகளையும் செய்து, 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி உதயன் குழுமத்துடன் சேர்ந்து உதயன் - சஞ்சீவி பத்திரிகையை ஆரம்பித்து, அவற்றின் பிரதம ஆசிரியரானார். யாழில் ஊடகவியலாளராக இருந்தவேளைகளில் இவருக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல்கள் பல வடிவங்களில் வந்தன. இவரது இறப்பை வாகன விபத்தாக்கும் முயற்சியில் மயிரிழையில் உயிர்தப்பி, இறுதிவரை தமிழர் தம் உரிமைப் போராட்டத்துக்கு தன் பேனாமுனையால் உரம் சேர்த்த ஊடகப் பேராண்மையுடைய மாண்பானார்.

சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் ஜே.பி,
இந்து மத குரு பீடாதிபதி,
பிரதம குரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

# ஊடகத்துறை சமீபகாலமாக நெருக்கடிக்குள் தவிக்கிறது

## கிளிநொச்சி ஊடக அமையம் கண்டனம்

**கிளிநொச்சி, நவ. 29**

**சமீப காலமாக வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன -என்று தெரிவித்துள்ளது கிளிநொச்சி ஊடக அமையம்.**

**முல்லைத்தீவில் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே கிளிநொச்சி ஊடக அமையம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.**




அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

சமீப காலமாக வடக்கு கிழக்கில் கடமையாற்றும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளனர். ஊடகவியலாளர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தல், தாக்குதல்கள் மேற்கொள்ளல், விசாரணைகளுக்கு அழைத்தல், அவர்களது உடைமைகளுக்கு சேதம் விளைவித்தல் என ஊடகத்துறை நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகத்துறை மீது மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான நிகழ்வுகள் நாட்டை மிக மோசமான நிலைமைக்கே கொண்டுசெல்லும். கருத்துச் சுதந்திரத்தை ஆயுதம் கொண்டு அடக்க முற்படும் நிலைமைகள் ஆரம்பிக்கப்படுகின்றமை கண்டனத்துக்குரியதோடு கவலைக்குரியதுமாகும்.

ஊடகவியலாளர்கள் தவறுவிடுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளுக்குச் செல்வதை விடுத்து அச்சுறுத்தி தாக்குதல்கள் மேற்கொள்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனைக் கிளிநொச்சி ஊடக அமையம் வன்மையாகக் கண்டிக்கிறது.

முல்லைத்தீவு ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நாட்டின் ஊடக சுதந்திரத்தின் மீதும் கருத்துச் சுதந்திரத்தின் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்.

எனவே இதற்கான நீதி நிலைநாட்டப்படுவதோடு, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் -என்றுள்ளது. (ம-214)

# ஊடகவியலாளரைத் தாக்கிய படையினர் மீது நடவடிக்கை!

## செல்வம் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவில் ஊடகவியலாளரைத் தாக்கிய படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட இந்தத் தாக்குதல் கண்டிக்கத்தக்கது. ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் -என்றார். (ம-213)

# சிப்பாய்கள் மீது சட்ட நடவடிக்கை

## புதுக்குடியிருப்புப் பிரதேசசபை உறுப்பினர் எஸ்.குகநேசன் வலியுறுத்தல்




முல்லைத்தீவு, நவ. 29

ஊடகவியலாளர் மீது முள்ளிவாய்க்கால் பகுதியில் இராணுவத்தினரால் மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த அத்துமீறல் நடவடிக்கையை முன்னெடுத்த இராணுவத்தினருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இல்லாத பட்சத்தில் இது வொரு போராட்டமாக வெடிக்கும் என்று தெரிவித்தார் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.குகநேசன்.

முல்லைத்தீவில் இராணுவத்தினரால் ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் இறந்தவர்களை நினைவேந்த முடியும் என்று அனுமதி வழங்கியது. இவ்வாறான நிலையில் என்ன அடிப்படையில் இராணுவத்தினரால் ஊடகவியலாளருக்கு எதிராக மேற்படி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது? அது மட்டுமன்றி வடக்கு- கிழக்கில் உள்ள எமது ஆலயங்களுக்குள் காலணிகளுடன் இராணுவத்தினர் நடமாடித் திரிகின்றனர். ஒரு விகாரைக்குள் இவ்வாறு செல்ல முடியுமா? அப்படியிருக்கையில் இந்த அனுமதியை இராணுவத்தினருக்குக் கொடுத்தது யார்? - என்றுள்ளது. (ம-19)

### ஊடகவியலாளர் மீதான தாக்குதல்

# 59ஆவது படையினரிடம் அறிக்கை கோரப்பட்டது

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவில் ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் பரிசோதகரிடமும் 59ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதியிடமும் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் வட. பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இணைப்பாளர் த.கனகராஜ் மேலும் தெரிவிக்கையில்,

'1முல்லைத்தீவு தலைமைப் பொலிஸ் பரிசோதகரிடமும் 59ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதியிடமும் சம்பவம் தொடர்பான அறிக்கை கோரப்பட்டன. மேலும் காயமடைந்த ஊடகவியலாளரிடமும் வாக்குமூலம் பெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன -என்றார். (ம)

# ஊடகவியலாளர் மீது இராணுவம் தாக்குதல்

## மன்னார் ஊடக அமையம் கண்டனம்

மன்னார், நவ. 29

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஷ்வச்சந்திரன் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலை மன்னார் மாவட்ட ஊடக அமையம் கண்டித்துள்ளது.

அந்த அமைப்பு அனுப்பிவைத்து ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களுக்கும், நெருக்கடிகளுக்கும், கெடுபிடிகளுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர். ஊடகவியலாளர்களை நிம்மதியாக இருக்கவிடாது அவர்களை அச்சுறுத்துதல், கடமைகளுக்கு இடையூறு விளைவித்தல், தாக்குதல்கள் மேற்கொள்ளல், விசாரணைகளுக்கு அழைத்தல் மற்றும் அவர்களது உடைமைகளுக்குச் சேதம் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல நெருக்கடிகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஷ்வச்சந்திரன் தனது ஊடகக் கடமையை மேற்கொண்டபோது சுமார் நான்கு சிப்பாய்கள் இணைந்து கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர், குறித்த ஊடகவியலாளரது கையடக்கத் தொலைபேசி, புகைப்படக்கருவி என்பன இராணுவத்தினரால் பறிக்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவமானது ஊடக சுதந்திரத்தின் மீதும் கருத்துச் சுதந்திரத்தின் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமாகவே நாம் கருதுகின்றோம்.

குறித்த சம்பவத்துடன் ஈடுபட்ட சிப்பாய்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதோடு, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் மன்னார் மாவட்ட ஊடக அமையம் அரசிடம் கோரிக்கை விடுக்கின்றது - என்றுள்ளது. (ம-213)

# ஊடக சுதந்திரம் மீதான தாக்குதல்

## வடமாகாண அவைத்தலைவர் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 29

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளரான விஸ்வலிங்கம் விஷ்வசந்திரன் மீது இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தாக்குதல் கண்டனத்துக்கு உரியது என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளரான விஸ்வலிங்கம் விஷ்வச்சந்திரன் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்தத் தாக்குதலானது தனிநபர் மீது நடத்தப்பட்ட தாக்குதலாக நாம் பார்க்கவில்லை, ஒட்டுமொத்த ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதலாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். எனவே குறித்த ஊடகவியலாளர் மீது தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் மீது சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊடகவியலாளர்களின் பாதுகாப்பினையும் இந்த அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் -என்றுள்ளது. (ம)

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு உறவுகளான
**திரு.தி.திருக்குமார் (கனடா)**
அவர்களின் அன்புத் தாயாரும்,
**சுதர்விழி (கனடா)** அவர்களின்
பாசமிகு மாமியாருமான

## திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாக்கியநாதன் குடும்பத்தினர்.**
**பொன்னையா வீதி,**
**ஆனைக்கோட்டை.**

(CS 706) 01/06

# நடன இயக்குநர் சிவசங்கர் கொரோனாவால் உயிரிழப்பு

சென்னை, நவ.29

தென்னிந்திய திரைப்பட நடன இயக்குநரான சிவசங்கர் நேற்று கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தார்.


இவர் திருடா திருடி, மகதீரா, பாகுபலி போன்ற திரைப்படங்களில் நடன இயக்குநராகப் பணியாற்றினார். மகதீரா திரைப்படத்தில் உள்ள ஒரு பாடலுக்காக இவருக்கு விருது வழங்கப்பட்டிருந்தது.



கொரோனாத் தொற்றுக்குள்ளாகி ஹைதராபாத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

(எ-இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## நாகலிங்கம் ஜெகதீஸ்வரன்

**29.11.2021**

தம்பி நீ மறைந்து ஓராண்டு ஆனதடா
எப்படியடா உன் பிரிவை தாங்குவது
உன் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின்
பாதத்தில் சாந்தியடையட்டும்


(CS655) (3/6)

சேச்லேன்
மல்லாகம்

உன் பிரிவால் துயருறும்
அக்காமார், தம்பிமார்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
08 – 04 – 1946



மறைவு
30 – 10 – 2021

## வலத்தீஸ் தர்மதாஸ்

ஏற்க மறுக்கும் உமது - இழப்பினை
ஏற்க வேண்டிய கட்டாயம்
ஏற்கிறோம், இனியும் உம்மைபோல
உலகில் யாரும் வரப்போவதில்லை
எனும் வேதனையுடன்

(CS 41292) (3/6)

துயருடன் வாடும்
மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்ப உறவுகள்

# கேள்வி அறிவித்தல்

## கிளிநொச்சி மயான அபிவிருத்திக்குழு

## பொதுமக்கள் நிதி நன்கொடை வேலைத்திட்டம் - 2021

01. தலைவர், கிளிநொச்சி பொது மயான அபிவிருத்திக்குழு, திருநகர், கரைச்சிபிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிடப்பட்டவரால் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள் வேலைக்காக கேள்வி கோரப்படுகிறது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் (National Competitive Bidding) நடைமுறைகளுக்குஅமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. எனினும் covid 19 அனர்த்தகால வேலைத்திட்டம் இது என்பதனால், கிளிநொச்சி மாவட்டத்தில் தகைமை பெற்றுள்ளவருக்கு முன்னுரிமை வழங்குவதற்கான தீர்மான வகிபாகத்தை கேள்விச் சபையே கொண்டிருக்கும்.

04. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பொருத்தமான CIDA தரத்தில் கட்டடங்கள் அமைப்பதற்கான பதிவினை மேற்கொண்டுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகுதிகள் பற்றிய விபரங்கள் (Qualification Information) கேள்வி ஆவணத்தின் பிரிவு 04ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் பிரிவு 05ல் கேள்வித்தரவு (Bidding data) மற்றும் ஒப்பந்த தரவு (Contract data) ல் வழங்கப்பட்டுள்ளன.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், தலைவர், மயான அபிவிருத்திக்குழு, கரைச்சி பிரதேசசபை A9 வீதி, கிளிநொச்சி (தொலைபேசி இல: 021 228 5761) எனும் முகவரியில் எழுத்து மூலமான கோரிக்கையினைச் சமர்ப்பித்து காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியில் உள்ள முழுமையான கேள்வி ஆவணத்தை (Original & Duplicate). தலைவர், மயான அபிவிருத்திக்குழு கரைச்சிபிரதேசசபை A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் மீள்ளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 3,000 காசாக செலுத்தி 01/12/2021 திகதியிலிருந்து 14/12/2021 வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 9.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

08. பூரணப்படுத்தப்பட்ட கேள்வி ஆவணம் (Original & Duplicate) 15/12/2021 அன்று காலை 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக தலைவர், மயான அபிவிருத்திக்குழு, கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். உறையின் (Envelop) இடது மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் வேலையின் விபரம் எழுதப்படவேண்டும். பிந்திய கேள்வி ஆவணங்கள் (Latebids) நிராகரிக்கப்படும். கலந்து கொள்ளக் கூடிய கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்வி ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலம் முடிவடைந்ததும் உடனடியாகத் திறக்கப்படும்.

09. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் (Pre Bid Meeting) 08/12/2021 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு மயான அபிவிருத்திக் குழுவின் ஒழுங்கமைப்புடன் கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். இதற்கு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

10. கேள்வி ஆவணத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கேள்வி வைப்புப்பிணை (Bid Security) ஆனது இணைக்கப்படவேண்டும்.


| கேள்வி இல | வேலைவிபரம் | மதிப்பிடப் பட்ட தொகை (மில்லியன்) | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் CIDA தரம் | கேள்விப். பிணைவைப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப் புத் தொகை | செல்லுபடியா கும் காலம் |
| KPS/KCDS /2021/01 | கட்டுமானம் மற்றும் எரிவாயு தகன இயந்திரப் பொறியினை நிறுவுதல் | 24.00 | 04 மாதம் | C5 அல்லது C6 | ரூபா 240,000.00 | 15.04.2022 |

**தலைவர்,**
**கிளிநொச்சி, மயான அபிவிருத்திக் குழு,**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**
**29.11.2021.**

(cr.36497)(2.6)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
18 . 09 . 1987



ஆண்டவன் அடியில்
29 . 11 . 2018

## அமரர். இராஜ்குமார் விஜெய் (மானிப்பாய்)

**திதி - 26.11.2021**

எங்கள் அன்பு மகனே விஜெய்
முன்னூறு நாட்கள் சுமந்து முப்பது ஆண்டுகள் வளர்த்து
மூன்று ஆண்டுகள் ஈரவிழிகளுடன் உனை இழந்து வாடுகின்றோம் மகனே
இன்று பாசத்தின் ஆணிவேர் அறுந்தது போல் உணர்கின்றோம்
பார்க்கும் இடம் எல்லாம் உன் புன்னகை முகமும்
சிரிப்பொலியும்தான் கேட்குதடா எங்கள் வீட்டுச் சின்னப்பிள்ளை நீ
எல்லோருக்கும் செல்லப்பிள்ளை
உன்பாச நினைவுகள் எம்மைத் தேம்பி அழவைக்குதடா
பாசமுள்ள பாதச் சுவடுகளைத் தேடித் தேடிப் பார்க்கின்றோம்
எம்மோடு நீ வாழ்ந்த காலங்களைப் பசுமையாக்கிச் சென்று விட்டாய்
எல்லாம் இருந்தும் ஏதோ ஒரு சோகம் எங்கள் மனதை
வாட்டி வதைக்கிறது மகனே
ஆறாத்துயர் எம்மை அனலாய் சுடுகின்றது. எம்மோடு வாழ்ந்தது போதுமென்று
வையகம் விட்டு வானுலகம் சென்று விட்டாய்
இனி ஒரு பிறப்பு உனக்கு வேண்டாம் மகனே
உன் ஆத்மா பிறப்பில்லாப் பெரு வாழ்வு வாழ எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!**

(CS 41272) (3/6)

உன் மீளாப் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா, அண்ணா, உற்றார், உறவினர், நண்பர்கள்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வரலாற்று நீக்கத்துக்கான எத்தனங்கள்

மாவீரர் நாளன்று வடக்கு– கிழக்கில் அரச ஆயுதப்படைகள் நடந்துகொண்ட விதம் , இலங்கையில் ஜனநாயகமும், நீதித் துறையும், தனிமனித அடிப்படை உரிமையும் எந்தளவு தூரம் பேணப்படுகின்றன என்பதற்கான எடுத்துக்காட்டுகளாக அமைந்துவிட்டன. இந்தமுறை மாவீரர்நாள்நினைவேந்தலுக்கு வழக்கம் போல தடைகேட்டு, நீதிமன்றங்களைப் பொலிஸார் நாடியபோது பல நீதிமன்றங்கள் தடை வழங்க மறுத்திருந்தன. எனினும் ‘ தடைசெய்யப்பட்ட பொருள்களை வைத்து நினைவேந்தினால் அல்லது சட்டத்தை மீறிய செயற்பாடுகளில் ஈடுபட்டால்’ சட்டப்படி நடவடிக்கையை பொலிஸார் எடுக்கலாம் என்றும் நீதிமன்றங்கள் அறிவுறுத்தியிருந்தன. புலிக்கொடி, புலிகளின் சீருடை, புலிகளின் தலைவரின் பெயர், புலிகள் அமைப்பைக் குறிக்கும் இலச்சினைகள் பெயர்கள், படங்கள் என்பவற்றையே ‘தடை செய்யப்பட்ட பொருள்கள்’ என நீதிமன்றங்கள் அர்த்தப்படுத்தியிருக்கவேண்டும்.

ஆனால், நடந்தது என்ன? வீதிக்குவீதி சோதனைச் சாவடிகள் நவம்பர் 25 ஆம் திகதி இரவே முளைத்துவிட்டன. மக்களை அச்சுறுத்தும் பாணியில் ரோந்துகள், பீல்ட் பைக் குறூப்பின் குறுக்குமறுக்கான ஓட்டங்கள் என போர்க்காலச் சூழலுக்குள் தமிழர்தாயகம் தள்ளப்பட்டிருந்தது. மாவீரர்துயிலுமில்லங்கள் தொடக்கம் பல்கலைக்கழகம், பத்திரிகை அலுவலகங்கள் வரை படையினர் குவிக்கப்பட்டுக் கண்காணிப்புக் கெடுபிடி பலப்படுத்தப்பட்டது. செய்தி சேகரிப்புக்காக ஒளிப்படம் எடுத்த ஊடகவியலாளர் ஒருவரை, முல்லைத்தீவில் படைத்தரப்பு மிகமோசமாக, குருதிக்காயம் ஏற்படுமளவுக்குத் தாக்கியது. அவரது ஒளிப்படக்கருவியையும் பறித்தெடுத்தது. தனது பிரதேசத்தில் உள்ள பெயர்ப்பலகையை ஒரு ஊடகவியலாளர் படமெடுக்கக் கூட இந்த நாட்டில் அனுமதி இல்லையா? ஊடக சுதந்திரம் எவ்வளவுதூரம் இலங்கையில் நசுக்கப்படுகின்றது என்பதை அந்த ஊடகவியலாளரின் குருதிக் காயங்களும், அவரைத் தாக்கப் பயன்பட்ட முட்கம்பி சுற்றப்பட்ட பச்சை பனம் மட்டையும் துலாம்பரமாக்கி நிற்கின்றன.

காலையில் ஊடகவியலாளர் மீதான பாய்ச்சலோடு தொடங்கிய படைத்தரப்பின் வெறி, மாலையாக இன்னும் உச்சம் கொண்டது. மாவீரர் துயிலுமில்லங்கள் , மாவீரர்களை நினைவு கூருவோரின் இல்லங்கள், பணிமனைகள் என்பவற்றுக்கு முன்னால், ஆயுதங்களோடு படைப்பிரசன்னம் அதிகரிக்கப்பட்டது. எவரும் அந்த இடங்களுக்குள் உட்புகமுடியாதவாறு வாசலை மறித்து அதிகாரத்தின் ஏவல்நாய்களாக அவர்கள் மாறிநின்றனர். நீதிமன்றங்களே நினைவேந்த அனுமதி கொடுத்த பின்னர், எப்படி படைத்தரப்போ ? பொலிஸாரோ? மக்களின் நினைவேந்தும் உரிமையைத் தடுக்க முடியும். ஒருவேளை நீதிமன்றம் அறிவுறுத்தியது போன்று நினைவேந்தலில் ஈடுபடுவோர் புலிக்கொடிகளையோ, அல்லது புலிகள் சார்ந்த சீருடை, படங்கள்,சின்னங்கள் என்பவற்றையோ பயன்படுத்து கிறார்களா என்று கண்காணிக்க வேண்டுமானால் படையினரையோ, பொலிஸாரையோ நினைவேந்தும் இடங்களுக்கு முன்னால் நிறுத்தியிருந்தால் கூடப் பரவாயில்லை. ஆனால் நினைவேந்தவே கூடாது என்று – நீதிமன்றங்கள் தடை போடாத போதும்– தடுப்பதற்கான அதிகாரத்தை படைத்தரப்புக்கு கொடுத்தது யார்? அப்படியானால் நீதிமன்றங்கள் என்ன சொன்னாலும் நாம் எம்மிஷ்டப்படிதான் நடப்போம் என்னும் திமிரோடுதான் படைத்தரப்பு மாவீரர் நாளில் நடந்து கொண்டிருக்கிறது.

நினைவேந்தல் என்பது ஒவ்வொரு மனிதரினதும் அடிப்படை உரிமைகளில் ஒன்று. சாதாரணமான, சாத்வீகமான நினைவேந்தும் உரிமையைக்கூட கொடுக்க மறுக்கும் சிங்கள–பௌத்த பேரினவாதம், தமிழர்களுக்கு எப்படி சுயநிர்ணய உரிமையோடு கூடிய சமஷ்டி முறையை வழங்குமென எதிர்பார்க்க முடியும்? எப்போதும் எம்மை தனது அடிமைகளாக வைத்திருக்கவே பேரினவாத அரசு நினைக்குமே தவிர, சிறு உரிமையைக் கூட எமக்காக அது தரப்போவதில்லை. நினைவேந்தல் செய்வதால் அரசாங்கத்துக்கு இறையாண்மை ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ எந்தவொரு இழப்பும் வரப்போவதில்லையே. பிறகேன் அதைத் தடுக்கவேண்டுமென நினைக்கிறார்கள்? "அதிகாரத்துக்கு எதிராகத் தமிழர்கள் போராடினார்கள்" என்ற பதிவை வரலாற்றின் பக்கங்களில் இருந்து இல்லாமற் செய்வதற்காகவே இத்தனை பாடுபடுகின்றார்கள் போலும். இந்த வரலாற்றுநீக்கத்துக்காகவே நீதியும், சட்டமும், மனித உரிமைகளும் மாவீரர் துயிலுமில்லங்களின் முன்பாக வருடந்தோறும் புதைக்கப்படுகின்றன.



# அரசு வெடித்துச் சிதறும் நாள் வெகுவிரைவில்!

## சஜித் அணி ஆருடம்

**கொழும்பு, நவ. 29**

**நாட்டில் காஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறுவதைப் போன்று இந்த அரசும் விரைவில் வெடித்துச் சிதறும் என்று தெரிவித்த முன்னாள் காணி அமைச்சரும் தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக, வடக்கு-கிழக்கில் 75 ஆண்டுகளாக அந்த மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை.எனவே அரசு வெடித்துச் சிதறுவதற்குள் அதனைத் தீர்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பெருந்தோட்ட அமைச்சு, காணி அமைச்சு மற்றும் 3 இராஜாங்க அமைச் சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:- வடக்கு கிழக்கில் இளைஞர்களையும் தேசிய விவசாயத் துறையில் இணைத்துக்கொள்ள அவர்களுக்குத் தேவையான நிலத்தைப் பெற்றுக்கொடுக்க மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக் கொண்டுள்ளதாககாணி அமைச்சர் அண்மையில் கூறினார். வடக்கு, கிழக்கில் 40 கிராமங்களுக்கு அதிகமான பகுதிகளில் 75 ஆண்டு களாக நிலவும்பிரச்சினை களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதனை நான்,இதற்கு முன்னரும் தெரிவித்திருந்தேன். அதேபோல் அவர்களின் காணி களுக்கான உறுதியை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும், அவர்களின் நிலங்களை சட்ட ரீதியாகப் பெற் றுக்கொடுக்க வேண்டும். காஸ் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறுவதைப்போன்று அரசும் வெடிக்கும் நிலையில் உள்ளது. ஒவ்வொரு நாளும் காலையில் அரசுக்குள் ஏற்பட்டுவரும் வெடிப்பைப் பார்க்கையில் அவ்வாறே நினைக்கத் தோன்றுகின்றது. இன்னும் குறுகிய காலமே இந்த அரசு இருக்கப்போகின்றது. அதற்குள் மக்களின் காணிப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்- என்றார்.

(ஒ-22)

# நடமாடும்சேவை, கிளினிக்குகளில் 3ஆவது டோஸ் வழங்கத் தீர்மானம்

## ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, நவ. 29

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியை ஏற்றி, மூன்று மாதங்கள் கடந்த 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், நடமாடும் சேவை மூலம் மூன்றாவது டோஸ் (பூஸ்டர் ) தடுப்பூசியை ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார். மருத்துவமனைகளுக்கு கிளினிக் செல்லும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், அந்த சிகிச்சையகத்தில் வைத்தே இந்த பூஸ்டர் தடுப்பூசியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்தி, ஒருமாதம் கடந்த தொற்றா நோய்களுக்கு இலக்காகியுள்ள 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், மூன்றாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

(த)

நவம்பர் 2021
வடமாகாண மரநடுகை மாதம்

“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
– தியோடர் ரூஸ்வெல்ற்.

# பொறியியல் துறையில் தமிழின் ஒரு படைப்பு !!

எமது நிர்மாணத் துறையின் மேம்பாட்டில் ஒரு மைல்கல்

பொறியியலாளருக்கோ துறை சார்ந்த வளர்ச்சியினை மேம்படுத்தும் ஒரு வினையூக்கி

நிர்மாணிகளுக்கு தமது தொழிலினை கௌரவத்துடன் ஒப்பேற்ற ஒரு வரப்பிரசாதம்

கணக்காளருக்கோ தேவையிருந்தும் இல்லாதது போன்ற மாயையை துடைப்பதற்கான பொக்கிஷம்.

நூலகத்திற்கோ இம் மண்ணில் நடந்தேறிய நிர்மாண விளைவுகளை ஆவணப்படுத்துவற்கான ஒரு அரிய ஏடு

அரச உயர் அதிகாரிகளுக்கு தம் கௌரவத்தினை மாசுபடுத்தாமல் இருந்த இடத்திலேயே பெற்றுக் கொள்வதற்கான ஒரு சிறிய கையேடு

வழக்கறிஞர்களுக்கோ நிர்மாணத்துறை பற்றிய ஒரு சிறிய கண்ணோட்டம்

தொழில்நுட்பவியலாளருக்கு அவர்கள் தம் அறிவினை வளர்க்கும் ஒரு புத்தகம்

தான் நடந்து வந்த பயணத்தின் இறுதிக் கால கட்டத்தில் தன்னைச் சார்ந்தவர்கள் பலரும் பயன்பெறும் முறையில் இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் (வடக்கின் பிரிவு) வேண்டுகோளுக்கிணங்க பிரசவித்த ஒரு படைப்பே!



படைப்பாளி
Eng.சி.உருத்திரலிங்கம்

(CS 680) 1-6

## ஒப்பந்த முகாமைத்துவம்
## [நிர்மாணத் துறை]

எனும் நூலாகும்.

ஓயாத அலைகளின் அலை-1 ஆக எமது படைப்பில் பொறியியல் துறையில் முதன் முறையாக இம் மண்ணில் 09.12.2021 தமிழில் வெளியாகவுள்ளது.

**இந்நூலின் முதன்மைப் பிரதிகளை பெற்றுக் கௌரவிக்க முன்வந்துள்ள பெருந்தகையினோர்**

- யாழ் பல்கலைக்கழக உப வேந்தர்
- யாழ் பொது நூலகத்தின் பிரதம நூலகர்
- அதி மூத்த பொறியியலாளர் விக்னேஸ்வரன் அவர்கள்.
- இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் வடக்கின் பிரிவின் தலைவர்.
- இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் வடமாகாணக் கிளையின் தலைவர்.

இந்நூலின் விலை ரூபா 850/=

பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்
1). ரூலின்ஸ் நிறுவனம், 08, "விமலம்", நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி இல:- 021 222 5534, 077 8256 334
2). இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம் (வ.மா) 54, மணிக்கூடு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.




பிரிட்டனில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்



பெல்ஜியத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்













கனடா - ரொரன்ரோ நகரில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்

லண்டனில் உள்ள நாடாளுமன்ற சதுக்கத்தில் மாவீரர் நாளின் நினைவாக ஆயிரக்கணக்கான கார்த்திகைப்பூ வைக்கப்பட்டுள்ளது







பிரிட்டன் ஒக்ஸ்போட்டில் உலகத் தமிழர் வரலாற்று மைய வளாகத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்.

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி நிரோஷி புஸ்பகுமார்

தோற்றம் 15.11.1994 | மறைவு 01.09.2021

எண்ணிப் பார்க்கின்றோம் 90 நாள்கள் தொகை தொகையாகச் சென்று விட்டது. ஏங்கி நிற்கின்றோம் எதையும் செய்யமுடியாது..... எத்தனை துன்பங்கள் எவ்வளவோ கஷ்டங்கள்.... எது வந்தாலும் எதையும் தாங்கும் இதயமாக உன் அப்பா நான் இருக்க எதுவுமே வேண்டாம் எவையும் வேண்டாம்..... உன் மழலைகளையும் வேண்டாம்..... மண்ணில் ஈன்றெடுத்த தாயும் வேண்டாம் .... உடன்பிறந்த சகோதரங்களும் வேண்டாம்.... உன் மண்ணும் வேண்டாம் என எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு நீ சென்றது ஏனோ? எமது இதயங்களின் புதுமலரே! எம் இறுதிவரை நீ பூத்தபடி இருப்பாய் என நாம் நினைக்க எம்மை எல்லாம் வாடி வதங்கவிட்டு முற்றாக நீ வாடி வீழ்ந்தது ஏனோ! எல்லாவற்றுக்கும் என்றோ ஒரு நாள் விடை கிடைக்கும் அந்த நாள் வரைக்கும் நாம் காத்திருப்போம் உன் கனவுகளை நனவாக்க.....

கடந்த 01.09.2021 அன்று எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி அகாலமரணமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் மரணச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூக வலைத் தளங்களினூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS 694) (3/6)

651/ 03, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். | தொடர்பு 077 773 0597 | அப்பா, அம்மா, பிள்ளைகள்



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்.



நெதர்லாந்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 12 . 1936 | மறைவு 20 . 11 . 2011



சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் இராசையா சிவஞானம்

" ஆண்டுகள் பத்து ஆனாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது "

பிரிவால் துயருறும்

அமரர் செல்வரட்ணம் - மனைவி,

பிள்ளைகள் : சிவமலர், சிறிச்செல்வம் , பத்மஸ்ரீ , சிறிஅன்பு , திருவருட்ஸ்ரீ (ஜேர்மன்) , தவமலர் (சுவிஸ்), சுகிர்தமலர் (சுவிஸ்)

மருமக்கள்: மகாதேவன் , வளர்மதி , கலைச்செல்வி , ஜெயவதனி, ராயினி (ஜேர்மன்), அருட்சோதி (சுவிஸ்), தயானந்தன் (சுவிஸ்)

மற்றும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ,

தகவல்: குடும்பத்தினர்.

## 'நொண்டி நாடகம்' நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், நவ.29

ஈழத்தின் பழமையான கூத்துக்களிலொன்றாகிய "நொண்டி நாடகம்" தென்மோடிக் கூத்து நூல் இன்று திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் செம்மணி வீதியிலுள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார். (எ)



# கிளிநொச்சி மாவட்டத்தில் 113 மாணவர்களுக்குத் தொற்று

கிளிநொச்சி, நவ.29

**கிளிநொச்சி மாவட்டத்தில் 113 மாணவர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட தொற்று நோயியல் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக் கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகள் மற்றும் கிளிநொச்சி பொது மருத்துவமனை ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படவுள்ளன - என்றார். (எ-214)


## ஜேர்மனியில் வேலைவாய்ப்பு

ஜேர்மனியில் வீட்டுப்பணி செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. உடன் நேரில் வரவும்.

- மாதவேதனம் 250,000/= (இலங்கை ரூபா)
- தங்குமிடம், உணவு இலவசம்
- இரண்டு வருட வீசா
- விமானப்பயணச்சீட்டு உள்ளிட்ட போக்குவரத்து இலவசம்

ஆர்வமுள்ளோர் நாளை செவ்வாய்க்கிழமை (30.11.2021) காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை இடம்பெறும். நேர்முகத் தேர்வுக்கு கடவுச்சீட்டு, தே.அ.அட்டை, சுயவிவரக்கோவை என்பவற்றுடன் வரவும்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:**

உதயன் விருந்தினர் விடுதி
கைலாசபிள்ளையார் கோவிலடி,
நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.

(CR 5537 B)


# டெங்குத் தொற்றைத் தடுக்க மக்கள் ஒத்துழைப்புத் தேவை!

## சுகாதாரத் துறையினர் கோரிக்கை




சாவகச்சேரி, நவ.29


தென்மராட்சியில் டெங்குத் தொற்று அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால் பொதுமக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் தங்கள் சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து அண்மையில் வந்த டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்குழு, பிரதேசத்தின் பல இடங்களிலும் டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய ஏது நிலைகள் காணப்படுகின்றன என்று அறிக்கையிட்டுள்ளது. உரிய காலத்தில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அதிக அபாய டெங்குப் பிரதேசமாக மாறும் அபாயம் உள்ளது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. தற்போது மழை பெய்துவரும் நிலையில் குடியிருப்பாளர்களும், காணி பராமரிப்பாளர்களும் தங்கள் குடியிருப்புக்கள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும். டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய நீர் ஏந்துப் பொருள்கள் காணப்பட்டால், அவற்றை அப்புறப்படுத்துவதுடன், பிரதேசத்தில் உள்ள அரச, தனியார் நிறுவனங்களும் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும்.

இன்று திங்கட்கிழமை முதல் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சுகாதாரப் பிரிவினர், பொலிஸார் மற்றும் உள்ளூராட்சிசபை உறுப்பி னர்கள் இணைந்து வீடுகள்தோறும் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர். டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய ஏது நிலைகள் காணப் படின் குடியிருப்பாளர் கள், காணி பராமரிப்பாளர்கள், நிறுவனத் தலைவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 05 . 1962



இறப்பு 28 . 11 . 2021

**கணேசுப்பத்தர் கதிர்காமத்தம்பி (அப்பன் ஆட்ஸ்)**

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசுப்பத்தர் கதிர்காமத்தம்பி நேற்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கணேசுப்பத்தர் தங்கம்மா தம்பதியரின் மூத்த மகனும், மகாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுடலைமுத்து மற்றும் பத்மலீலா தம்பதியரின் அன்பு மருமகனும், கணேசாந், கோகுல்ராஜ், அபிலேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரி, காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, கருணாகரன், லிங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பெருமாள் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் பத்மநாதன், சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2021) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியுளவில் 576, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 7081)


## அறிவிப்பாளர்கள் தேவை




இணையத் தொலைக்காட்சி, வானொலி என்பவற்றில்
**நிகழ்ச்சித் தொகுப்பாளர், செய்திவாசிப்பாளர், அறிவிப்பாளர்**
பணிகளுக்கு ஆண் / பெண் இருபாலாரும் தேவை.




அனுபவம் உள்ளோருக்கு முன்னுரிமை.
ஆர்வமுள்ளோர் விண்ணப்பிக்கவும்.

**editor@uthayan.com**

(CR 5537 A)

# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 09 . 1958

மறைவு 28 . 11 . 2021

## திருமதி பரமேஸ்வரன் விமலாதேவி

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும், 1ஆம் குறுக்குத் தெரு, கல்வயலை வதிவிடமாகவும், மட்டுவில் வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரன் விமலாதேவி அவர்கள் நேற்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பசுபதி தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பசுபதி பரமேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், மல்லிகாதேவி, சறோசாதேவி, பத்மநாதன், சிவபாதம், கமலாதேவி ஆகியோரின் சகோதரியும், திருகரன் (டென்மார்க்), கஜன் (பனை ஆராய்ச்சி நிலையம்-கைதடி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரித்தா (டென்மார்க்), தாக்ஷாயணி ஆகியோரின் அன்பு மாமியும், ஹர்ஷ்வின், ரோஹினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2021) திங்கட்கிழமை அன்னாரின் தற்காலிக வதிவிடமான மட்டுவில் வீதி புத்தூர் கிழக்கு, புத்தூரில் முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் மட்டுவில் வண்ணாத்திப்பாலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மட்டுவில் வீதி,**
**புத்தூர் கிழக்கு, புத்தூர்.**

**தகவல்:**
**கஜன் (மகன்)**
**077 935 7136**

(CR 5539) 1-6

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 07 . 1950

மறைவு 27 . 11 . 2021

## திரு. சின்னத்துரை உலகநாதன் (SLEAS)

**(ஓய்வுபெற்ற அதிபர் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)**

வேலணை மேற்கு 8ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு சின்னத்துரை உலகநாதன் அவர்கள் கடந்த (27.11.2021) சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமசிங்கம்பிள்ளை- தையல்நாயகி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான யோகநாதன் சரவணபவன் மற்றும் சபாநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தவமணி அவர்களின் ஆருயிர்க் கணவரும், அச்சுதநாத், பிரசன்னன், தனசங்கர், மாதங்கி ஆகியோரின் அன்பு அப்பாவும், பிரியா, அனுசியா, லவன் ஆகியோரின் அன்பு மாமனாரும், துளசி, மதிஷ், ஆதிஷ் ஆகியோரின் ஆருயிர் அப்பப்பாவும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான தேவராசா, தனபாலன் மற்றும் சறோ, சந்திரலேகா, நாமகள் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள்.**

(CS 707) 1-6

# மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 10 . 1946

மறைவு 28 . 11 . 2021

## சண்முகம் நாகேஸ்வரி

சுதுமலை ஐங்கரன் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நாகேஸ்வரி நேற்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி-செல்லாச்சி தம்பதியரின் மூத்த மகளும், சண்முகத்தின் (சின்னத்தம்பி) அன்பு மனைவியும், புவனேஸ்வரி, குமாரவேல், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, வேலும்மயிலும் மற்றும் சிவனேஸ்வரியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிறிதரன், மற்றும் சிறிராஜன், சிறியுகன், சுகந்தினி, சிறிகரன், ஜெயந்தினி, விமல்ராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதீஸ்வரி, சத்தியா, ஜேக்கப் டொனாஸ், கௌரி, ஜெகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2021) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை தெற்கு,**
**ஐங்கரன் வீதி, மானிப்பாய்.**
**077 9175704, 076 7184 641**

**தகவல்:**
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

(CS 709) 1-6

# மரண அறிவித்தல்



## திருமதி சரோஜினிதேவி மகேஸ்வரன்

**(ஓய்வுபெற்ற வவுனியா கல்வி இலாகா நிர்வாக உத்தியோகத்தர்)**

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற வவுனியா கல்வி இலாகா நிர்வாக உத்தியோகத்தராக இருந்த திருமதி சரோஜினிதேவி மகேஸ்வரன் அவர்கள் கடந்த (27.11.2021) சனிக் கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் அம்பிளா பாலாவோடை காலஞ்சென்ற ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மகளும், சுப்பையா மகேஸ்வரனின் மனைவியும், காலஞ்சென்ற திருமகள், சம்மியாதேவி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயலட்சுமி சபாநாதன் (டென்மார்க்) ஸ்ரீனிவாசன், பரமேஸ்வரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சபாநாதன் தவராசாவின் (டென்மார்க்) மாமியாரும், காலஞ்சென்ற அம்பிகை பாகன் மற்றும் ராசமலர் (டென்மார்க்), புவனேஸ்வரி சுகிர்தா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திவ்யா (டென்மார்க்), கார்த்திக் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சிவபாதசுந்தரம் (U.K), Dr. மீனாட்சிசுந்தரம் (U.K), சியாமளா (உமா-அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், கஜலட்சுமி (டென்மார்க்), சதாசிவம் (சவூதி), ஆதிசிவன் சத்தியபாமா ஜனனி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் களபூமி கணவோடை இல்லத்தில் இன்று (29.11.2021) திங்கட்கிழமை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, 30.11.2021 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் செய்யப்பட்டு, காரைநகர் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ஸ்ரீனிவாசன் 077 205 7193**
**குடும்பத்தினர்.**
**உற்றார், உறவினர், நண்பர்கள்.**

(CR 5538) 1-6

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் பேச்சில் முதிர்ச்சி தெரியும். கலகலப்பான நாள். செலவாகும் என்று நினைத்த விடயம் குறைந்த செலவில் முடியும். உடன் பிறந்தவர்கள் மூலம் உதவி கிடைக்கும். நல்லவர் நட்பு வரும்.

**இடபம்:** புதிய பொருள் வாங்குவதற்கு முயற்சி செய்வீர்கள். உங்களின் துணிச்சலான செயல் மற்றவர்களால் பாராட்டப்படும். கடனில் ஒரு பகுதியை அடைப்பதற்கு நல்ல வழி பிறக்கும்.

**மிதுனம்:** இழுபறியாக இருந்து வந்த விஷயம் ஒன்று முடிவடையும். தள்ளிப்போன வழக்கில் தீர்ப்பு சாதகமாகும். நண்பர் உதவி செய்வார். அதிகப் பேச்சு வேண்டாம்.

**கடகம்:** உங்களைப் பற்றிய உண்மையில்லாத விமர்சனங்களைப் புறக்கணியுங்கள். திருப்பம் ஒன்றால் மனம் மகிழும். உற்சாகமாக வலம் வருவீர்கள். சுபச்செய்தி கிடைக்கும். வெளியிடத்தில் நன்மதிப்பு உண்டாகும்.

**சிம்மம்:** உறவினர்களுடன் இருந்து வந்த பழைய மனக்கசப்புகள் நீங்கும். பண நெருக்கடிக்கு தீர்வு காண்பீர்கள். கலகலப்பான நாள். நண்பர்களுக்கிடையே இருந்த பிரச்சினை தீரும். யோகமான நாள்.

**கன்னி:** பகை கொண்ட நண்பர், அக்கம்பக்கத்தினரிடம் நல்லுறவு வரும். வாகனத்தில் செல்லும் போது பாதுகாப்பாக செல்லுங்கள். பொருள்கள் வாங்கும் போது சரிபார்த்து வாங்குங்கள்.

**துலாம்:** குழந்தைகள் உங்களின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்விப்பார்கள். பல காலம் தடைப்பட்ட விடயங்கள் நல்ல விதத்தில் முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும்.

**விருச்சிகம்:** புதுவேலைக்கான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பயம் நீங்கும். குடும்பத்தில் ஒருவருக்கு நல்ல வாழ்க்கைத் துணை ஏற்பாடாகும். பிரச்சினை ஒன்றைப் புதிய அணுகுமுறையால் தீர்ப்பீர்கள்.

**தனுசு:** வாகனத்தைச் சீர்செய்வீர்கள். சேமிப்பில் ஆர்வம் ஏற்படும். தோல்வி மனப்பான்மையில் இருந்து முழுவதுமாக விடுபடுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும்..

**மகரம்:** குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் விலகும். பரபரப்பான நாள். பணியிட பளுவை குடும்ப நிகழ்வு ஒன்று சரிக்கட்டும். அனைத்து நடவடிக்கைகளிலும் சற்றுக் கவனமாக இருங்கள்.

**கும்பம்:** பேச்சிலும், செயலிலும் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. உங்களைத் தவறான வழியில் ஈடுபடுத்துவோரை விலக்குங்கள். பூர்வீக சொத்தில் ஒரு பங்கு உங்களின் கைக்கு வரும்.

**மீனம்:** உறவினர்களால் ஆதாயம் அடைவீர்கள். பயம் நீங்கும். போராட்டங்கள் குறையும். உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். முடிக்கப்படாமல் இருந்த விடயம் ஒன்றை முனைந்து முடிப்பீர்கள்.

# பாதுகாப்புத் தரப்பினரை கண்டிக்கிறது சஜித் அணி

மாவீரர் நாளான நேற்றுமுன்தினம் வடக்கு- கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் மேற்கொண்ட அராஜகங்களைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வன்மையாகக் கண்டித்துள்ளது.

"இது ஜனநாயக நாடு" எனில் போரில் இறந்தவர்களை அமைதியான முறையில் நினைவேந்த அவர்களின் உறவுகளுக்கு உரித்துண்டு. அதை ஆயுத முனையில் அடக்க முயல்வது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழர் செறிந்து வாழும் வடக்கு- கிழக்கில் ஆயுதப் படைகள் நடந்துகொண்ட விதம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் இராணுவ ஆட்சிக்கு இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டு' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'வடக்கில் மக்களை மட்டுமல்ல ஊடகவியலாளரையும் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். அதேவேளை, சிலர் கைது செய்யப்பட்டும் உள்ளனர். இந்த அராஜக நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றோம். இறந்தவர்களை நினைவேந்த அனைவருக்கும் உரிமை உண்டு. இதில் இன, மத, மொழி வேறுபாடு காட்டக்கூடாது' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

'நாட்டில் தற்போது நடப்பது காட்டாட்சி என்பதை வடக்கு, கிழக்கில் நேற்றுமுன்தினம் அரச படைகள் நடந்துகொண்ட விதம் எடுத்துக்காட்டுகின்றது. போரில் இறந்தவர்களை அமைதியாக நினைவேந்த பல இடங்களில் நீதிமன்றமே அனுமதி வழங்கிய நிலையில், அதையும் மீறி இராணுவத்தினருடன் சேர்ந்து பொலிஸார் நடந்துகொண்ட விதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (ஓ-22)

# மன்னன் துட்டகைமுனு செய்ததை ஏன் உங்களால் செய்யமுடியாது?

## நாடாளுமன்றில் சிறீதரன் கேள்வி



**கொழும்பு, நவ. 29**

**இந்த நாட்டில் துட்டகைமுனு மன்னன், தமிழ் மன்னனான எல்லாள மன்னனுடன் போரிட்டு, அந்தப்போரில்தான் வென்ற பின்னர், எல்லாள மன்னனுக்கு சமாதி அமைத்து, வணக்கம் செலுத்துங்கள் என்று சொன்ன சிங்கள வீர வரலாற்றைக்கொண்ட நாட்டில் துட்டகை முனு மன்னன் செய்ததை ஏன் உங்களால் செய்ய முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கேள்வி எழுப்பினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே மாவீரர்களை நினைவுகூர்ந்ததுடன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- உலகே பிரமித்து நிற்கத்தக்க பிரம்மாண்டத்தோடு தமிழின விடுதலை ஒன்றையே மூச்சாகவும் வீச்சாகவும் கொண்டு 30 ஆண்டு காலமாக நடைபெற்று முடிந்த மக்கள் போராட்டத்துக்காகத் தம்மையே தாரைவார்த்த எமது தேசத்து வீரர்களை பயங்கரவாதிகள் என்று விளித்து பறைசாற்றுவது எத்தனை அபத்தமானது என்பதை நான் இந்த இடத்தில் கேட்க விரும்புகின்றேன்.

அதேபோல் நீண்ட நெடிய நெருப்பாறாய் நிகழ்ந்தேறிய போரின் விளைவாகப் பொருளாதார ரீதியாகவும் அடையாள ரீதியாகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உறவுகளின் உயிரிழப்பு என வலி தாங்கிய இனமாக வாழத்தலைப்பட்டிருக்கும் எமது மக்களின் மனக்காயங்களுக்கும் அவர்களின் ஆற்றாமைகளுக்கும் ஆறுதல் அளிப்பதாய், அமைதி தருவதாய், நம்பிக்கை ஊட்டுவதாய் அமையக்கூடியது இறந்தவர்களை நினைவுகூரும் உரிமை ஒன்றேயாகும்

அந்த அடிப்படை உரிமையைக்கூட வலிந்து மறுதலிக்கும் அரசின் செயற்பாடுகள் இந்த மண்ணில் எமது மக்களின் இருப்பை இன்னும் இன்னும் கேள்விக்குட்படுத்துவதாகவே அமைகின்றது.

இழப்பின் வலி சுமந்து நிற்கும் ஓர் இனத்தின் ஒவ்வொரு குடும்பத்தவர்களினதும் சமய, சமூக, பண்பாட்டு விழுமியங்களைத் தழுவிய நினைவு கூரல் என்னும் அடிப்படை உரிமை க்கான பிரார்த்தனைகளையும் சமய சடங்குகளையும் மேற்கொள்கின்ற போது அவை உள்ளூர் அதிகாரத்துவமுள்ள அதிகாரிகளால் பயங்கரவாத விடயங்களோடு ஒத்துப்பார்க்கப்படுதல், அல்லது போராட்டம் ஒன்றை மீள உருவாக்கம் செய்வதற்கான முனைப்பாகக் காண்பிக்கப்படுத்தல், அத்தகைய பிரார்த்தனைகளில் ஈடுபடுபவர்களை கோரமான உணர்வுகளைக் கொண்டவர்களாக சித்திரித்து அவர்களைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்தல் என்பன தவறான அர்த்தப்படுத்தல்களாகும்.

எமது மாவீரர்களின் உயிர்த்தியாகங்களையும் மாவீரர் தினத்தின் புனித தன்மையையும் வலிந்து மலினப்படுத்தும் செயலாகவே அமைகின்றது.

இனவிடுதலை என்னும் சத்திய இலட்சியத்துக்காக, தமிழ்ச் சமூகத்தின் விடிவுக்காக, அடுத்த சந்ததியின் அமைதியான வாழ்வுக்காக வாழ்வியலின் அத்தனை சுகபோகங்களையும் துறந்து மனித சுதந்திர உணர்வின் பிரதிபலிப்பாய் தம்மையே தற்கொடையாக்கி 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை இந்த மண்ணிலே புதைத்து விட்டு விடுதலையை நோக்கிய ஆழ் மன ஏக்கங்களோடு தவித்திருக்கும் எமது மக்களின் வலிசுமந்த மனப்பரப்பின் முழுமைக்கும் மாவீரர்களின் தியாகங்கள் என்றென்றைக்கும் சுடர்ந்த வண்ணம்தான் இருக்கும்.

கையறு நிலையில் இருக்கும் எமது மக்கள் அரூபத்தன்மை கொண்ட ஆபத்பாந்தவர்களாக ஆழ்மனதில் வைத்து பூஜிக்கும் மாவீரர்களின் நினைவுகளை நீதிமன்ற தடை உத்தரவுகளாலும் நீண்டி ருக்கும் ஆயுதமுனைகளாலும் நீர்த்துப்போகச் செய்ய முடியாது என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பீர்கள்.

இந்த நாட்டிலே ஜே.வி.பி.க்கும் தங்களுடைய இழந்து போன வீரர்களை அவர்கள் நினைவுகூருவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் யாருக்கும் இதில் தடையில்லை.

இந்த சபையில் எதிர்க்கட்சிகள்கூட இறந்து போனவர்களை நினைவுகூருவதற்கான தடையை விதிக்க வேண்டாமெனக் கூறின. ஏன் இந்த நாட்டில் இருந்த துட்டகைமுனு மன்னன் கூட எல்லாள மன்ன னுடன் போரிட்டு அந்தப்போரில், தான் வென்ற பின்னர் எல்லாளனுக்கு சமாதி அமைத்து வணக்கம் செலுத்துங்கள் என்று சொன்ன சிங்கள வீர வரலாற்றைக்கொண்ட நாடுதான் இந்த நாடு. போர் வீரர்களை மதிக்கின்ற நாடு. ஆகவே ஒரு போரில் ஒருவர் இறந்திருந்தால் அவரை மதிக்கின்ற பக்குவம் உங்களுக்கு வரவேண்டும். அந்தப்பக்குவம் இருக்கின்ற நாடுதான் நியாயமான, கருத்துக்களைக் கருத்துக்களால் வெல்கின்ற, அடுத்த இனத்தின் கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்ற பக்குவமுள்ள நாடாக இருக்க முடியும்.

தமது சொந்த மண்ணிலேயே அடிப்படை உரிமை இழந்த நசுக்கப்பட்ட இனமாக இருந்து கொண்டு தனது இருப்பைத் தக்கவைப்பதற்காக எல்லா வழிகளிலும் போராடத் தலைப்பட்டுள்ள தமிழினத்துக்கு இத்தகையதோர் இழிநிலை வந்துவிடக்கூடாது என்ற வரலாற்றுக்கண்ணோட்டத்தோடு விடுதலை என்பது ஓர் அக்கினி பிரவேசம். நெருப்பு நதிகளை நீந்திக்கடக்கும் நீண்ட பயணம். அது தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம் என்ற தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து தர்மத்தின் வழிநின்று இனவிடுதலை என்ற சத்திய இலட்சியத்துக்காக தமது இன்னுயிர்களை ஈகம் செய்து தமிழினத்தின் எழுச்சிக்கு மூச்சாகி நின்ற எம் மாவீரச் செல்வங்களை என் நெஞ்சிருத்தி அஞ்சலிக்கின்றேன். - என்றார். (ஓ-22)

## ஏல விற்பனைக்கான கேள்வி அறிவித்தல்
## போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.


யாழ் போதனாவைத்தியசாலையில் 2020 ஆம் ஆண்டுக்கான பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களை ஏலவிற்பனை செய்தல் தலைவர், ஏலவிற்பனை சபை 2020 ஆம் ஆண்டு பின்வரும் விதி முறைகளுக்கு அமைவாக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்வி மனு கோரப்படுகின்றது.

1. ஏலவிற்பனை தேசிய போட்டிப் பெறுகைகள் முறைக்கு (NCB) அமைவாக இடம்பெறும்.
2. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் மார்கழி (December) மாதம் 06.07.08 ஆகிய மூன்றுதினங்களும் காலை 9.30 மணிமுதல் மாலை 2.00 மணிவரை இல.111, பிரதானவீதி, மடத்தடியில் உள்ள யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் ஏலவிற்பனைக்கான பொருட்களை பார்வையிட முடியும்.
3. பொருட்களைப் பெறவிரும்புபவர்கள் வைத்தியசாலைக் காசாளரிடம் ரூபா 500.00 இனை செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று கேள்விமனு பத்திரத்தினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
4. மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா10.000.00 இனை வைத்திய சாலைக் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பிரதியினையும் இணைத்து கேள்விமனு பத்திரத்தினை பூரணப்படுத்தி மூடிய கடித உறையினுள் இட்டு யாழ் போதனாவைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள பெட்டியினுள் 09.12.2021ம் திகதி காலை 10.30மணிக்கு முன்பாக இடுதல் வேண்டும்.
5. அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்படும். அதி கூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்வி தாரர். காசாளரிடம் அத்தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று மறுநாள் வெள்ளிக்கிழமை (10.12.2021) மாலை 04.00 மணிக்கு முன்பாக பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
6. கேள்விமனு மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அப்பொருட்களை பெறுவதிலிருந்து விலகுவாராயின் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணத்தினை மீளப்பெற முடியாது என்பதோடு எதிர்வரும் காலத்தில் வைத்தியசாலையில் இடம்பெறும் ஏலவிற்பனையிலும் பங்குபெற தகுதியற்றவராக கருதப்படுவார்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் ஏலவிற்பனை சபைக்கு உரியதாகும்
8. மேலதிக விபரங்களை வைத்தியசாலைக் கணக்காளரின் தொலைபேசி **இலக்கம் 021-2223149, 021-2212482 இனை அழைத்து பெற்றுக் கொள்ளமுடியும்.**

**பணிப்பாளர்,**
**போதனாவைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**29.11.2021**

(CR 36495) (3/6)





# நினைவலைகள்

**இருபத்து நான்காம் ஆண்டு நினைவலைகள்**

**அமரர் சின்னத்தம்பி சின்னையா**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்
(Radio Officer - Foreign Ship)
**திதி: துதியை**

**ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்**

**அமரர் சின்னையா சரோஜினி**
**திதி: தசமி**

நாளெல்லாம் நலமாய் வாழ காலமெல்லாம்
கரம் தந்த வாழ்வின் இரு தீபங்கள்
நித்தம் உங்களைத்தேடித் தேடி அழுகின்றது மனசு
நித்தம் இரங்கும் இறைவன்
ஏன் அழைத்தான் உங்களை
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்**

**நினைவுகளுடன்**
**பிள்ளைகள்**

(cr.36484) (2.6)

## காணிக் கச்சேரி

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் காணிக்கச்சேரி நடைபெற்றுள்ளது. இந்தக் காணிக்கச்சேரி, இம்மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை பிரதேச செயலகம் மற்றும் கலாசார மண்டபம் ஆகியவற்றில் நடைபெற்றது.

தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப் பதற்காக நடைபெற்ற இந்தக் காணிக்கச்சேரியில் 70 வீதமானோர் பங்குபற்றியிருந்தனர். பிரதேச செயலகத்துக்குக் கிடைத்த 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பங் களை வைத்து இந்தக் காணிக்கச்சேரி நடைபெற்றது. (ஒ-ரி1-9)

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை
## ஒப்பந்தகாரர்களையும், வழங்குனர்களையும் பதிவு செய்தல் - 2022

சபையானது 2022 ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப் பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்கள், ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**01. பொருட்கள்**

01. காகிதாதிகள் எழுதுபொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. கட்டடப் பொருட்கள்
05. கற்கள், மணல், கிரவல்
06. தீந்தைவகைகள் (Paints) நிறந்தீட்டும் பொருட்கள்
07. நீர் வழங்கும் குழாய்கள், கியூம்பைப்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
08. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
09. கனரக இயந்திர உதிரிப்பாகங்கள்
10. மின்வழுங்கும் பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள்
11. எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள்
12. இரும்புப்பொருட்கள்
13. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
14. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
15. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
16. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
17. பாதணிகள், தோற்பொருட்கள்
18. இலத்திரனியல் பொருட்கள்
19. வாகன சுத்திகரிப்பு பொருட்கள்
20. இறப்பர் முத்திரை தயாரித்தல்

**02. சேவைகள்**

01. அச்சிடுதல்
02. வாகனங்கள் திருத்தல்
03. கனரக இயந்திரங்கள் திருத்துதல்
04 வாகனங்களுக்கான ரயர், ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
06. மீளமின் வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு(சாதாரண, மெக்கானிக்கல்)
09. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு (Service)

**03. ஒப்பந்தவேலைகள் (CIDA பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்)**

01. கட்டட நிர்மாண வேலை
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாண / திருத்த வேலைகள்

பதிவிற்காக ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை அலுவலக நாட்களில் மு.ப.8.30 - பி.ப. 3.00 மணிவரையும் பிரதேசசபை வெங்கலச்செட்டிகுளம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் விண்ணப்பக்கட்டணமாக ரூபா 1000.00 உம் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2022 எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தவிசாளர், வெங்கலசெட்டிகுளம் பிரதேசசபை, மன்னார் - மதவாச்சி வீதி, செட்டிகுளம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 27.12.2021 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு 024-2260055 அல்லது 024-2260914 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.**

**தவிசாளர்,**
**பிரதேசசபை,**
**வெங்கலச்செட்டிகுளம்,**

**29.11.2021**

(CR 36476) (3/6)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## வழங்குநர்களை பதிவுசெய்தல்- 2022

வலிகாமம் தெற்கு பிரதேச ச்பையானது 2022ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணனி, இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள் மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப்பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள் |
| A - 11 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |
| A - 16 | மருந்துப்பொருட்கள் |
| A-17 | மரக்கன்றுகள் மற்றும் சாடிகள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B- 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுக்குளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தககங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B- 10 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 12 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |


- ❖ வழங்கல்கள் 2022ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
- ❖ ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- ❖ விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பதிற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ.1000.00 இனை செலுத்தி தலைமை அலுவலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2022" எனக்குறிப்பிட்டு "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்" எனும் முகவரிக்கு 20.12.2021ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- ❖ மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**0212244045 / 0212240017**

**க.தர்சன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

(CR 36474) (3/6)

# சேவை நயப்பும் மணி விழா வாழ்த்தும்




## திருமதி நாகராசா முகுந்தசுந்தரி

(SLTS-I)

**சேவை விவரம்**

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்
26.03.1990 - 31.12.1993 வரை
கிளி/சென். திரேசா மகளிர் கல்லூரி
01.01.1994 - 31.12.2007 வரை
கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்
01.01.2008 - 10.02.2013 வரை
யாழ்/விக்ரோறியாக் கல்லூரி
11.02.2013 - 29.11.2021 வரை


எமது கல்லூரியின் ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும் சேவையாற்றி இன்று (29.11.2021) திங்கட்கிழமை ஓய்வுபெறும் ஆசிரியை அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் கழகம்**
**யா/ விக்ரோறியாக் கல்லூரி.**

# 6 ஆம் ஆண்டு நினைவுச்சுடர்

தோற்றம்
09 . 11 . 1956



மறைவு
05 . 12 . 2015

## அமரர் கிட்டினர் நாகராசா

**திதி: அபரபக்கதசமி**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவராய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஆறு மறைந்தாலும் எம்
உள்ளங்களில் என்றும் நீங்காது
நிலைத்திருப்பீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கைதடி நாவற்குழி,**
**கைதடி.**

**குடும்பத்தினர்**
**077 720 1615**

(cs 41319 (2.6)

### ஊடகவியலாளர் மீது.....

லாளர் வி.விஸ்வசந்திரன் மீது முல்லைத்தீவு, முள்ளியவளைப் பகுதியில் வைத்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சா ட்டப்படுகின்றது. காயங்களுக்குள்ளான ஊடகவியலாளர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இது தொடர்பான முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், 3 இராணுவத்தினரைக் கைது செய்துள்ளனர். கைது செய்தவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சர்வதேச ஊடகம் ஒன்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்னவிடம் கேள்வியெழுப்பியபோது, இராணுவ வீதித் தடையைக் காணொலிப் பதிவு செய்து கொண்டிருந்த நபரை விசாரணை செய்ய முயற்சித்தபோது, அந்த நபர் அங்கிருந்து தப்பிச் செல்ல முயற்சித்த சந்தர்ப்பத்தில் தடுமாறி வீழ்ந்தார் என்றும், ஊடகவியலாளர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தவில்லை என்றும் கூறியுள்ளார். (எ -இ)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF GRADUATE STUDIES
## VACANCY FOR THE POST OF MANAGEMENT ASSISTANT (ON CONTRACT)

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the under-mentioned post from suitably qualified persons up to **10.12.2021.**

**1. Management Assistant – (ON CONTRACT)**

REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE

1. Should have passed G.C.E (Ordinary Level) Examination in six subjects at One Sitting with credit passes in
   i) Sinhala/ Tamil
   ii) English Language/ English Literature
   iii) Mathematics

   AND
2. Should have Pass in all subjects at G.C.E.(Advance Level) examination (except the common general paper) at One Sitting (Passing in 3 subjects under the old syllabus at one sitting would be sufficient)
3. Preference will be given to those who possess the following;
   a. Fluency in English
   b. An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from recognized institutes.
   c. Two years of experience in the use of computer application packages.
4. Should be not less than 18 years and not more than 30 years of age on the closing date of the application.


REMUNERATION AND OTHER CONDITIONS

* A monthly payment of Rs. 36,900 (fixed)
* This appointment is on fulltime contract basis for a period of six months, extendable as per need.

**HOW TO APPLY:**
Applications should be on <u>specified form (for each post)</u> issued by the University. Application Form and other particulars for the above posts can be **downloaded only from the University website - <u>www.jfn.ac.lk</u>.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of University of Jaffna Collection Account Number: 970,0000 9000 0387. A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**<u>Sample Deposit Slip is given below:</u>**




All the Educational/Professional qualifications and experience obtained as at the closing date of the applications **<u>will only be considered</u>** when evaluating the candidates. Application without the copy of the supportive documents for Educational/Professional and Experience will be rejected.

The envelope containing the duly filled application form must bear title of the post which you are applied for on its top left hand corner and send under registered post to reach us on or before **10.12.2021** to the following address.

**Assistant Registrar**
**Faculty of Graduates Studies,**
**University of Jaffna. Palaly Road, Thirunelvely, Jaffna**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
**26.11.2021**

(cr.5517) (2.6)

## அனைவரது...

தற்போதைய மற்றும் கடந்தகால சவால்கள் தொடர்பாகவும், வாய்ப்புக்கள் தொடர்பாகவும் இலங்கையில் பல்வேறுபட்ட தரப்பினரது அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து கொள்ள முடிந்தமை மெச்சத்தக்கது என்று தெரிவித்துள்ள அவர், சமாதானம் மற்றும் அபிவிருத்தி விடயங்களில் இலங்கையும், ஐக்கிய நாடுகள் சபையும் ஒன்றிணைந்து பணியாற்றுவதை அவர்கள் வரவேற்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதன் அவசியம் தொடர்பாக வலியுறுத்தியுள்ள அவர், அவற்றை நிறைவேற்றுவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தயராக இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வந்திருந்த காலி கியாரியின் பணிகள் கடந்த வியாழக்கிழமையுடன் முடிவடைந்தன. அவர் இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச, நீதியமைச்சர் அலி சப்ரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், இராஜதந்திரிகள் எனப் பல தரப்பினருடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். (எ-இ)

## கொரோனா...

ழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

உயிரிழந்தவர்களில் 13 பேர் பெண்கள் என்றும், 14 பேர் ஆண்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயிரிழப்புகளுடன் நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 305 ஆக உயர்ந்துள்ளது.

இலங்கையில் நேற்று 742 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது.

அதையடுத்து நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 62 ஆயிரத்து 520 ஆக உயர்ந்துள்ளது. (எ-22)

## இளம்தாய்...

னின்றி உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி, உதயநகர் கிழக்கைச் சேர்ந்த 19 வயதுப் பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் இரு மாதக் குழந்தையின் தாய் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 18ஆம் திகதி இவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கடந்த 22ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த இவர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## நெடுந்தீவு...

அவதானித்த பொதுமக்கள் நெடுந்தீவுப் பொலிஸாருக்கு அது தொடர்பில் தகவல் வழங்கியுள்ளனர். நெடுந்தீவுப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது என்றும், சடலத்தை இனங்காண முடியவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை மற்றும் மணற்காடு பிரதேசங்களிலும் சடலங்கள் கரையொதுங்கியிருந்தன. (எ-125,27)

## 12வயதுச்....

வர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு, கொடிகாமத்தில் நடந்துள்ளது.

பெண்ணின் கணவர் இரு மாதங்களுக்கு முன்னர் காலமாகியுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் இருந்த மகனை தாய் வீட்டில் இருக்க வேண்டாம் என்று அடித்து விரட்டியுள்ளார் என்று கூறப்படுகின்றது. சிறுவன் இரவு முழுவதும் வீதியில் நின்றுள்ளார். நேற்றுக்காலை கொடிகாமம் பொலிஸ் நிலையம் சென்று இது தொடர்பில் சிறுவன் முறையிட்டான் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார், நேற்று நண்பகல் தாயைக் கைது செய்துள்ளனர். சிறுவன் பொலிஸ் பாதுகாப்பில் தங்க வைக்கப்பட்டுள்ளான். அதேவேளை, கடந்த 7ஆம் திகதி தாய் தாக்கியதில் சிறுவன் ஐந்து நாள்களாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றான் என்றும் கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்ட தாயை நீதி மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-27)

## சிற்றுண்டிகளின்...

10 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (ய)

## யாழிலும்...

வகைகளின் விலைகளை 5 ரூபாவாலும் நேற்று நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கச் செயலர் கா.பாஸ்கரன் தெரிவித்தார்.

பாண் உற்பத்திக்குத் தேவையான மாவின் விலை 17 ரூபாவாலும், ஸ்பெசல் பாண் மற்றும் பணிஸ் உற்பத்திக்குத் தேவையான மாவின் விலை 23 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்படி விலை அதிகரிப்புக்களை மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை நாடளாவிய ரீதியில் பாணின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## காணிசுவீகரிப்புக்கு...

கப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போராட்டத்தில் அனைவரும் பங்குகொள்ள வேண்டும் என்று வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது ஜே/150 கிராம அலுவலர் பிரிவில் 2013ஆம் ஆண்டு 400க்கும் மேற்பட்ட பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரின் தேவைக்காகச் சுவீகரிக்கப்பட விருந்தன. வலி.தென்மேற்கு பிரதேச சபையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததை அடுத்து 300க்கு மேற்பட்டவர்களின் காணிகள் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

2014ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்தபோதும், பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படாதிருந்தன. அங்குள்ள 14 ஏக்கர் காணிகள் இராணுவத்தின் தேவைகளுக்காக சுவீகரிக்கப்படவுள்ளன என்று வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்தக் காணிகளுக்குள் 10க்கும் மேற்பட்ட பொதுமக்களின் காணிகளும் உள்ளடங்குகின்றன. அந்தக் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகள் இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியப் பற்றாளர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரையும் இணைத்து காணி அபகரிப்பைத் தடுக்கும் முகமாக இன்று காலை 8.30 மணிக்கு அந்த இடத்தில் ஒன்றுகூடி எதிர்ப்பை வெளிப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் இணைத்து ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கோருகின்றோம்- என்றுள்ளது. (எ-319)

## வெடித்தன...

ரென வெடித்துள்ளன.

எரிவாயு சிலிண்டர்களால் வெடிப்புச் சம்பவங்கள் நடக்கின்றன என்று வெளியாகும் தகவல்களால் மக்கள் குழப்பமடைந்திருக்கும் நிலையில் நேற்றும் எரிவாயு அடுப்புக்கள் திடீரென வெடித்துள்ளமை மக்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. கந்தரோடையில் உள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு திடீரென வெடித்துள்ளது. அதன் சிதறல்கள் அறை முழுவதும் பறந்துள்ளன. அதேவேளை, கஹட்டபிட்டியவில் உள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பை இயக்கிய பின்னர், அடுப்பு திடீரென வெடித்து சிதறல்கள் பறந்துள்ளன. இந்தச் சம்பவங்களில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. அதேநேரம், எரிவாயு சிலிண்டர்களுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எரிவாயு அடுப்புக்கள் திடீரென வெடித்தமைக்காக காரணம் தெரியவரவில்லை.

நாட்டின் பல இடங்களிலும் அண்மைய நாள்களில் நடந்த வெடிப்புச் சம்பவங்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் காரணம் என்று கூறப்படுகின்றது. அதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இந்த நிலையில் எரிவாயு அடுப்புக்கள் வெடித்துள்ளமை அவர்களை மேலும் அச்சத்துக்குள்ளாகியுள்ளது. (எ-27)

## சித்தார்த்தன்...

ராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று தமிழீழ மக்கள் கழகத்தின் பொதுச் செயலாளர் சதானந்தனின் நினைவு தின நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மாவை சோ.சேனாதிராஜா இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழ் மக்கள் இன்று மிகப் பெரிய நெருக்குடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்றில் என்றுமில்லாதவாறு நெருக்கடிமிக்க காலமாக இன்றைய நிலைமை இருக்கின்றது. இங்கு உரையாற்றிய அனைவரும் தமிம் மக்களின் பிரச்சினை தொடர்பாக நாங்கள் இன்னமும் ஒரு கோட்டில் பயணிக்கவில்லை என்பதையே சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதற்கான நானும் பொறுப்பேற்க வேண்டி இருக்கிறது. இந்த இனத்துக்காக மிக நீண்டகாலமாக உழைத்தவன் என்ற ரீதியிலும் மிகப்பெரிய பாரம்பரியமுடைய கட்சி ஒன்றினது தலைவர் என்ற ரீதியிலும் நானும் அதற்கான பொறுப்புகளை ஏற்கவேண்டியிருக்கின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகள் ஒன்றுபட்ட தரப்பாக, ஒற்றுமையுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று இன்று, நேற்றல்ல நீண்டகாலமாகப் பேசப்பட்டுவருகின்றது. துரதிர்ஷ்டவசமாக அது கைகூடவில்லை. அதற்காக நாம் அந்த முயற்சியைக் கைவிட்டுவிட முடியாது.

முன்னைய நாள்களில் கட்சியில் அல்லது கட்சிக்கு வெளியே ஒரு பிரச்சினை வருகின்றது என்றால், முதலில் சமாதானம் பேசும் தூதுவராக இருந்தவர், தற்போதை நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் தந்தை தர்மலிங்கம்தான். அவரின் வழித்தோன்றலான சித்தார்த்தன், ஒற்றுமை முயற்சியைத் தலைமைதாங்கிக் கொண்டு செல்ல வேண்டும்.

சகல தமிழ்த் தரப்புகளையும் ஒன்றிணைக்கக்கூடிய ஆற்றல் அவரிடம் இருக்கின்றது என்று கருதுகின்றேன். எந்த விடயத்தையும் நிதானமாகவும், பொறுப்பாகவும் செயற்படுத்தி, அனைவரோடும் நட்புறவாகப் பழகக்கூடியவர் சித்தார்த்தன். இந்த வேண்டுகோளை அவர் நிறைவேற்ற வேண்டும். இது அவர் தமிழினத்துக்குச் செய்யக்கூடிய மாபெரும் கடமை என்றே நான் எண்ணுகின்றேன்- என்றார். (எ-இ)

## கிண்ணியா...

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த 6 வயதுச் சிறுமி ஒருவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கிண்ணியா அல் அஷ்கர் வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் ரபீஸ் பாத்திமா என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

கடந்த 23ஆம் திகதி நடந்த இந்தப் படகு விபத்தில் 5 சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்திருந்தனர். பலர் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். (எ-இ)

## ஊடகவியலாளர்...

தீவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் பகுதிக்கு செய்தி சேகரிப்புக்காகச் சென்றபோது, தன் மீது இராணுவச் சிப்பாய்கள் தாக்குதல் நடத்தியதாக பிராந்திய ஊடகவியலாளரும் முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பொருளாளருமான விஸ்வலிங்கம் விஷ்வசந்திரன் குற்றஞ்சுமத்தியிருந்தார். காயங்களுக்குள்ளான நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதில் வடக்கு மாகாணத்தின் பல்வேறு ஊடக அமைப்புக்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

ஊடகவியலாளர்கள் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் தாக்குதல்கள் சித்திர வதைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து நேற்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம், மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பனவற்றின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் அமைந்துள்ள ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபி முன்றலிலும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. (எ-246)

# புலிகளுக்குத் தடையை நீக்க ஐரோப்பிய நீதிமன்றம் மறுப்பு


**ஜெனிவா, நவ. 29**

**ஐரோப்பாவின் சர்வதேச பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலிலிருந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நீக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஐரோப்பிய பொதுநீதிமன்றம் நிராகரித்துள்ளது.**

விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாதத் தடைப்பட்டியலிலேயே ஐரோப்பா வைத்துள்ளது. தடையில் இருந்து விடுத லைப்புலிகளை நீக்கவேண்டும் என்று பல்வேறு நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், அந்தத் தடையை நீக்குமாறு முன்வைத்த கோரிக்கையையே ஐரோப்பிய பொதுநீதிமன்றம் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ம)

## சுன்னாகம் தபால்நிலையக் கட்டடம்; இனியாவது நடவடிக்கை எடுங்கள்

### அரசிடம் கோரினார் சித்தார்த்தன் எம்.பி.



கொழும்பு, நவ. 29

சுன்னாகம் தபால்நிலையக் கட்டட விவகாரத்தில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவது மாத்திரமல்லாது, அந் தக் கட்டடம் என்ன நோக்கத்துக்காக அமைக்கப்பட்டதோ அது நிறைவு செய்யப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,:-

முன்னைய அரசில் அமைச்சராக இருந்த மனோகணேசனின் அமைச்சு ஊடாக சுன்னாகம் தபால் நிலையக் கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. என்னால் அதற்கான அடிக்கல் நடுகை செய்யப்பட்டது.

கட்டடம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தை அபிசன் கட்டுமான உரிமையாளர் கோமகனுடன் அப்போதைய மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் மேற்கொண்டிருந்தார். 6 மாதங்களுக்குள் கட்டுமானம் நிறைவுறுத்தப்பட வேண்டும் என்று ஒப்பந்தத்திலிருந்தது. ஒப்பந்தம் வழங்கு வதில் முரண்பாடுகள் இருந்ததாக தேசிய கணக்காளர் அலுவலகமும் குறிப்பிட்டி ருந்தது. ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதேவேளை- 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முன்னாள் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், கட்டட வேலைகள் முடிக் கப்பட்டதாகவும் நிதி விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சின் செயலருக்கு கடிதம் அனுப்பியிருந்தார். ஆனால் அதன் பின்னர் மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்ட க.மகேசன், நிதிப் பற்றாக்குறை காரணமாக ஒப்பந்தம் முடிவுறுத்தப்படுவ தாக கடிதம் எழுதியிருந்தார்.

இவை ஒன்றுக்கு ஒன்று பரஸ்பரம் முரணானவை. அதிகாரிகளின் முரண்பாடு கள் பல அபிவிருத்திப் பணிகளைப் பாதிக்கின்றது. அதற்கு இதுவும் உதாரணம். ஊழல் மோசடி நிர்வாகச் சீர்கேடு இவைகளைப் பற்றிப் பேச்சு வந்தால் உடனே அரசியல்வாதிகள் பக்கம் கை செல்லும்.

அதிகாரிகளால் ஏற்படுத்தப் படுகின்ற நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் பறிபோகின்றன. இவைகளைப் பற்றி யாருமே கதைப்பதும் இல்லை கேட்பதும் இல்லை. இந்த அரசு இதனைக் கேட்கவேண்டும். ஜனாதிபதி கோத்தாபய பதவிக்குவரும்போது இவ்வாறான விடயங்களை முடிவுக்கு கொண்டு வருவேன் என்று கூறினார். எனவே அவரின் அரசு இதனைக் கேட்கவேண்டும்- என்றார். (ஒ-5)

## மகப்பேற்றியல் நிபுணர்களுக்கு மருத்துவ பேராசிரியர் பதவி!

கொழும்பு, நவ.29

மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் மருத்துவ நிபுணர்கள் 16 பேருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் மருத்துவ பேராசிரியர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் 54ஆவது வருடாந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு பிரதமரின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்விலேயே இந்த மருத்துவப்பேராசிரியர் பதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ச, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் ஆலோசகர் பேராசிரியர் அமரசிங்க, விசேட மருத்துவ நிபுணர் பிரதீப் டி சில்வா உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-இ)

**வேலையாள்கள் தேவை**

மருதனார்மடத்தில் இயங்கும் புடைவை நிறுவனத்திற்கு தொழில் அனுபவமுள்ள அல்லது பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (cs.41320) (2.6)

**076 816 1363, 077 841 7811**

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

"CHRISMAS OFFER" Over - 11kg

- U.K - 1000/-
- Germany - 1300/-
- Australia - 1650/-
- France - 1400/-



உள்நாடு 24 Hours
வெளிநாடு 3 - 5 Days
பணியாளர்கள் தேவை

**Lanka Cargo Worldwide Express**
**315, Kasthuriyar Road, Jaffna.**
(CS 699) (3/6) 076 283 2397

**வட மாகாண இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் எமது VTC கிளை நிறுவனமானது 2022 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு வட மாகாணத்தில் புதிய கிளை நிறுவனங்களை நிறுவும் நோக்கில் பின்வருமாறு கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஆண், பெண், இருபாலாருக்குமான வேலை வாய்ப்பை வழங்க உள்ளது.

தங்குமிட உணவு வசதிகள் இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

இணைய விரும்புபவர்கள் பின்வரும் தொ.பே. இலக்கத்திற்கு 077 144 0786 தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முழுப்பெயர் என்பவற்றை SMS செய்யவும்.

மேலதிக விபரங்களுக்கு
**077 993 2927, 075 160 5705**
(CS 41321) (3/6)

**TECHNO WORLD**
**தொழில்நுட்பக் கல்லூரி**
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை

**A/L - 2023 புதிய பிரிவு**
ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்

**A/L - 2021 Day Class**
பகல் வகுப்புக்கள் ஆரம்பம் (திங்கள் முதல் வெள்ளி
காலை : 8.30 முதல் 12.30 வரை)
ஆரம்பம்: 01.12.2021

A/L - ஆசிரியர்களை மாத்திரம் கொண்ட கல்வி நிறுவனம்

நிலையான இடத்தில் எமக்கே உரித்தான நவீன ஆய்வு கூட வசதிகளுடன்

| | | |
|---|---|---|
| தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - | ராகவன் (B.Sc) |
| | | முருகநிறோயன் (B.Sc) |
| | | நிறோஜன் (B.Sc) |
| பொறியியல் | - | அருண்குமார் [B. Tech Hons Eng.)] |
| தொழில்நுட்பம் | - | சிவஜன் (Lecturer) |
| | | நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் | - | திருக்குமரன் (B.Sc in Agri.) |
| தொழில்நுட்பவியல் | - | நிரோஜன் (B.Sc in Agri.) |
| | | சிவகுமார் (B.Sc in Agri.) |
| தகவல் தொடர்பாடல் | - | உமாகாந்தன் (BIT) |
| தொழில்நுட்பவியல் | - | நஜன் (B.Sc) |
| விவசாய | - | சாரங்கன் (B.Sc in Agri.) |
| விஞ்ஞானம் | - | திருக்குமரன் (B.Sc in Agri.) |
| | | நிரோஜன் (B.Sc) |
| புவியியல் | - | தினேஷ் (B.A) |
| ஊடகக்கற்கை | - | N.கஜிதரன் (B.A) |
| கணிதம் | - | மோகன்ராஜ் (B.Sc) |
| சித்திரம் | - | ஜெயந்தன் (B.A) |

2022, 2021, Day Class மாணவர்களும் புதிதாக இணைய விரும்பும் மாணவர்களும் இணைந்துகொள்ளலாம்.
காலை 10.00 மணிமுதல் 2.00 மணிவரை அனுமதிகளை நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**077 017 5346**
(cr.36496) (2.6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.